Registered at the G. P. O. as a Newspaper        வாரப் பதிப்பு        விலை சதம் 15

# ஈழநாடு
EELA NADU

போன் 389        National Tamil Daily        தேசிய தினசரி        தபால் பெட்டி என்: 48

மலர் 5    யாழ்ப்பாணம்    சோபகிருது    தை 20 ஆம் ...    ரமளான பிறை 17    (2 2 4)    ஞாயிற்றுக்கிழமை    இதழ் 356




# துறைமுக விவகாரம் ஆராய குழு

## பிரதமர் நியமித்தார்

### விரிவான அறிக்கை விரைவில் சமர்ப்பிக்க கோரிக்கை

கொழும்பு, சனி

**இலங்கை வர்த்தக சங்கம், துறைமுக கூட்டு ஸ்தாபனம் ஆகியவற்றின் விவகாரங்கள் சம்பந்தமாகவும் குமாஸ்தாக்கள், சிப்பந்திகள் சங்கம், துறைமுக ஏற்றுமதி இறக்குமதி கூட்டுறவு ஸ்தாபனம் என்பனவற்றின் பலதரப்பட்ட பிரச்னைகள் சம்பந்தமாகவும் விசாரணைசெய்து தமக்கு விரிவானதொரு அறிக்கை சமர்ப்பிப்பதற்கென பிரதமர் ஒரு குழுவை இன்று நியமித்துள்ளார்.**

வர்த்தக டைரக்டர் திரு. எம். ஜி. வி. பி. சமரசிங்காவைத் தலைவராகக் கொண்ட இக்குழுவில் வர்த்தக அமைச்சைச் சேர்ந்த திரு. என். எல். அபயவீரா, அரசாங்க ஸ்தாபன கட்டுப்பாட்டு உதவி அதிகாரி திரு எஸ். பி நாணயக்காரா ஆகியோர் அங்கத்தவர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவ்விசாரணைக்குழு அதன் அறிக்கையை கூடியவிரைவில் சமர்ப்பிக்குமாறு பிரதமர் கோரியுள்ளார்.

துறைமுகத் தொழிலாளரிடையே இருந்துவரும் பல பிரச்னைகள் பற்றி அறியவும் இதற்குத் தீர்வுகாணவழிவகைகளைக் கையாளுவதற்காகவுமே பிரதமர் இவ்விசாரணைக்குழுவை நியமித்துள்ளதாக நம்பப்படுகிறது. குழு தனது வேலைகளை விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறது.

## 35 கூ: மொ. வி. ஸ்தாபன நிலையங்கள் திறக்கப்படும்

கொழும்பு, சனி

இவ்வருடம் மே மாதம் முடிவதற்கு முன் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் 35 கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன நிலையங்களைத் திறக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## தமிழரசு வாலிப முன்னணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுதந்திரதினத்தன்று இலங்கையொட்டி நடைபெறும் எந்த வைபவங்களிலும் பங்கு கொள்ள வேண்டாமென்றும் இத்தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்கும்படியும் தமிழசு வாலிப முன்னணி தமிழ்பேசும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அன்று மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டமொன்றும் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்கள் பலர் உரை நிகழ்த்துவார்கள்.

## ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

விலைவாசிகள் ஏற்றத்தைக் குறித்து யாழ்ப்பாணம் கம்யூனிஸ்ட் கட்சியால் நேற்று நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறவில்லை. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சமசமாஜக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளைக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அந்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் ஒரு திகதி குறிப்பிட்டு அன்றைய தினம் ஆர்ப்பாட்டம் நடைபெறும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

## 'நியமனங்கள் நிரந்தரமானதல்ல'

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாடசாலைகளில் காலியான அதிபர் நியமனங்களுக்குச் செய்யப்பட்ட பதில் அதிபர் நியமனங்கள் சமயோசிதமானவையாக இருந்த போதிலும் நிரந்தரமானவையல்லவென்று, ஆசிரியர் சங்கத் தூதுகோஷ்டியிடம் கல்வி அதிபர் திரு. அல்விஸ் தெரிவித்தார்.

இக்கோஷ்டியில் வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. மு. பேராயிரவர், தேசிய ஆசிரிய சங்கத் தலைவர் திர். ஆர். எம. அபயவர்த்தன, காரியதரிசி திரு எட்மண்ட் வீரசேகரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வாழ்க்கைச் செலவு: 111·2

கொழும்பு, சனி

என்றுமில்லாத வகையில் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 111·2ஆக உயர்ந்துள்ளது. மிக அண்மையில் 110ஆக இருந்த வாழ்க்கைச் செலவு சில நாட்களில் இவ்விதம் ஏற்றம் கண்டுள்ளது.

## பழைய நட்பை புதுப்பிக்க வந்துள்ளேன்

### விமானநிலையத்தில் மவுண்பேட்டன்பிரபு

கொழும்பு, சனி

தென்கிழக்காசியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் மவுண்ட்பேட்டன் பிரபு இன்று பகல் 12 மணிக்கு விசேஷ விமானமூலம் கொழும்புவந்து சேர்ந்தார். இலங்கையில் இவர் நான்கு நாட்கள் தங்கியிருப்பார்.

மவுண்ட்பேட்டன் பிரபுவை விமானநிலையத்தில் இராணுவ, கடற்படை, விமானப்படைகளின் உயர்தர அதிகாரிகள் வரவேற்றனர். பிரிட்டிஷ்தூதர் திரு மைக்கேல் வாக்கரும், இந்தியத்தூதர் திரு. கபூரும் மவுண்ட்பேட்டன் பிரபுவை வரவேற்றனர்.

பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் அவர் தெரிவித்ததாவது:-

எனது பழைய நண்பர்களைச் சந்திக்கவும், உங்கள் மக்களின் நட்புறவையும், இலங்கையின் இயற்கை அழகையும் பருகவே நான் இங்கு வந்துள்ளேன். என்னை அழைத்தமைக்காக அரசாங்கத்துக்கு நான் நன்றியுடையேன். போர்க்காலத்தில் நான் எனது தலைமைக் காரியாலயத்தில் வைத்திருந்தேன். அந்த நாட்களில் இலங்கை மக்கள் எனக்கு அளித்த உதவிகளை நினைவு கூரும்போது இன்பநினைவுகள் என் மனதில் எழுகின்றன. அப்பொழுது நீங்கள் தந்த ஆதரவு அந்த இருள் சூழ்ந்த நிலையில் எனக்கும் எனக்குக் கீழ் வேலை செய்த படையினருக்கும் பெரும் ஊக்கம் அளித்தன. எனக்கு இலங்கையில் பல நண்பர்கள் இருக்கின்றனர். நான் யுத்தகாலத்தில் தங்கியிருந்தபோது திருமதி பண்டாரநாயக்கா தனது கணவருடன் என்னை வந்து சந்தித்தார். எனது பழைய நட்பை புதுப்பித்துக்கொள்ளவே நான் இங்கு வந்துள்ளேன்."

மவுண்பேட்டன்பிரபு நாளை பொலன்னறுவைக்குச் செல்வார். நாளை இரவு பிரதமர் விருந்தளிக்கு இராப்போசனம் அளிப்பார். இவர் திங்கட்கிழமை கண்டிக்கு விஜயம் செய்வார். கண்டியிலிருந்து கொழும்பு திரும்புகையில் ஹொரகல்லையில் காலஞ்சென்ற பிரதமரின் சமாதிக்கு விஜயம் செய்வார். செவ்வாய்க்கிழமை நாட்டைவிட்டுப் புறப்படுவார்.

## இன்று

இன்று காலை 9 மணியளவில் நல்லூர் விநாயகராலயத்தில் பஞ்ச விநாயகருக்கு கும்பாபிஷேகமும் இரவு உற்சவமும் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

## தோம்பேயில் அமைதி நிலவியது

கொழும்பு, சனி

இன்று தொம்பேயில் சுதந்திரக்கட்சியினதும் யு. என். பி. யினதும் கூட்டங்கள் பலத்த பொலிஸ் கண்காணிப்புடன் வெகு அமைதியாக நடைபெற்றன. நேற்று இங்கு நடைபெற்ற சில சம்பவங்களைத் தொடர்ந்து இன்றைக்கும் அசம்பாவிதங்கள் நடைபெறுமென எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை.

தொம்பே தொகுதியில் சந்திக்கு சந்தி இன்று பொலிசார் காவல் புரிந்தனர். நேற்று இங்கு ஏற்பட்ட அசம்பாவிதம் ஒன்றில் யு. என். பி க்கட்சியினரின் வான் ஒன்று சேதப்படுத்தப்பட்டது; அதன் சாரதியும் தாக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து இன்றும் அசம்பாவிதம் ஏதும் நடைபெறலாம் என அஞ்சப்பட்டது.

## சூ-என்-லாய் இலங்கை வருவார்

கொழும்பு, சனி

சீனப்பிரதமர் சூ-என்-லாய் இம்மாதக்கடைசியில் இலங்கை வருவார் எனநம்பப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிவித்தல் ஒன்றில், இலங்கைப் பிரதமர் 1962-ல் சீனாவுக்கு விஜயம் செய்திருந்த போது திரு. சூ-என்-லாயை இலங்கைக்கு வருமாறு விடுத்த அழைப்பை சீனப்பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரபுநாடுகளில் விஜயம் செய்துவரும் திரு. சூ-என்-லாய் அந்த பிரயாணங்களை முடித்துக்கொண்டு இம்மாதக் கடைசியில் இலங்கைவருவார் எனக் கூறப்படுகிறது. திரு. சூ-என்-லாயுடன் உதவிப்பிரதமர் திரு.சென்யியும் இலங்கை வருவார்.

புகையிலை – மிளகாய் – கத்தரி – முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
பொலிடோலுடன்–மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL    METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
PHONE 397 JAFFNA    ROYAL DISPENSARY    T'GRAMS ROYAEL

ஈழத்து ஈச்சுவரங்கள் —2. முன்னேச்சுவரம்

# பதினைந்து நூற்றாண்டுப் பழமைவாய்ந்த முன்னைநாதர் ஆலயம்

— வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ. —

ஈழத்து ஈச்சுவரங்களில் முன்னேச்சுவரம் அல்லது முன்னீஸ்வரம் ஈஸ்வரங்களில் எல்லாவற்றுள்ளும் முதலாக அமைக்கப்பட்டது. முன்னைந்த ஈச்சுவரமே முன்னேச்சுவரம் எனப்பட்டது. இச்சிவத் தலம், இலங்கையின் மேற்குக்கரையில் உள்ள சிலாபத்திற்கு ஏறக்குறைய ஒரு மைல் அணித்தாக இருக்கிறது. கொழும்பில் இருந்து முன் பின்னாக 55 மைல் தொலைவில் உள்ளது. கொழும்பில் இருந்து ஒன்றரை மணித்தியாலயத்துக்குள் மோட்டார் ரத மூலம் முன்னேச்சுவரத்தை யாத்திரிகர் அடையலாம்.

சிவ மகா புராணத்தில் உள்ள சநத் குமார சங்கிதை கூறும் அழகேசுவரம் என்னும் தலமும், தேவி பீடங்கள் 64-ல் கூறியிருக்கும் ஸ்ரீ லங்கா பீடமும், இதுவேயாகும் என அறிஞர் கருதுகின்றனர். முன்னேச்சுவரத்தில் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதப் பெருமான் எழுந்தருளியிருக்கிறார். இச்சிவத்தலம் இராமயணம், பாரதம் ஆகிய இரு காவியங்களில் வரும் முக்கிய பாத்திரங்களுடன் தொடர்புள்ளதென புராணம் கூறுகிறது.

ஸ்ரீ இராமபிரான் இராவணனைச் சங்காரம் செய்த பின், இராவணனின் புஷ்பக விமானத்தில் ஆகாய மார்க்கமாக இலங்கையிலிருந்து போகும் பொழுது, கரிய நிறமும் சாயா ரூபமுமுடையபிரமகத்தியானது அவரைப் பின் தொடர்ந்தது. முன்னேச்சரத்தைச் சமீபித்ததுடன் அது அவரை விட்டு அகன்றது. எனவே ஸ்ரீ இராமரும் சீதாபிராட்டியும் முன்னேச்வரக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை பூசித்தனர் என்று தெட்சிண கைலாசபுராணம் கூறுகின்றது. இராம-இராவண யுத்தம் நடைபெற்று 10000 ஆண்டுகளுக்கு முன் பின் என்று கூறுவர் அறிஞர்கள்.

பாண்டவர் காலம் ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்னராம். உண்மையில் இற்றைக்கு 5164 ஆண்டுகளுக்கு முன்னர் என ஆராய்ச்சியாளர் முடிபு கட்டியிருக்கின்றனர். பஞ்சபாண்டவர்களுள் ஒருவராகிய அர்ச்சுனன் தாம் பாரியாகிய அல்லி மகாராணி, தாம் அயலிலே முத்துக்குளிக்கும் காலங்களில் கிடைக்கும் ஆதாயத்தில் ஒரு பங்கை ஸ்ரீ மதுரை மீனாட்சிசுந்தரி கோவிலுக்கு, ஒரு பங்கை ஸ்ரீ வடிவாம்பிகை முன்னைநாத சுவாமிக்கும் மிகுதி ஒரு பகுதியை தமக்கும் உரியதாக்கி வந்ததாகக் கர்ணபரம்பரை வரலாறு உண்டு. மன்னார்க் குடாவில் முத்துக் குளிக்கப்பட்டுவந்தது. கொழும்பிலிருந்து 120 மைல் தொலைவில், குதிரை மலை என்னும் இடமுண்டு. புத்தளத்துக்கு வடக்கே, கல்பிட்டியா உள்ளது. கல்பிட்டியாவில் இருந்து தோணி மூலம் குதிரை மலைக்குச் செல்லலாம். குதிரை மலைக்கு அணித்தாக அல்லி அரசாணியின் அரசமாளிகையின் அழிவுகள் காணப்படுகின்றன என்று முதலியார் இராசநாயகம் அவர்கள் தமது யாழ்ப்பாணச் சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிளினி என்னும் சரித்திராசிரியர் குறிப்பிடும் ஹிப்புரூஸ் என்பது குதிரை மலையையே குறிக்கும். அரிப்பு என்னும் துறை முகம் அருவி ஆறு கடலுடன் சேரும் இடத்திலுள்ளது. அரிப்பு, சிலாபம், மறிச்சுக்கட்டி, மன்னார் முதலிய வட மேற்குப் பிரதேசம் முத்துக் குளிப்புக்குப் பேர்போன இடங்கள். அல்லிஅரசாணியால் கட்டப்பட்ட தோறணை மாளிகை அரிப்புக்குக்கிட்ட அழிந்துகிடக்கின்றது. அக்கட்டிடத்தில் மேலேயுள்ள மூன்று வில்மாளிகைகளில் நடுவொழிந்த இரண்டும் இடிக்கப்பட்டன; மற்றதை இடிக்க இயலாமல் அவ்வளவில் விடப்பட்டது. சோழி முட்டைகளின் வெள்ளைக்கருவால் இக்கட்டடத்திற்குப் பசை சேர்க்கப்பட்டது என்று கர்ணபரம்பரையாகக் கூறுவர். அர்ச்சுனன் கீரிமலைக்கு வந்து தீர்த்தமாடிச் சென்றான் எனவும் கூறப்படுகிறது.

சோழ நாட்டிலே திருவாரூரிலே சோழன் மரபில் உதித்த வரராமதேவன் மகன் பாலசிங்கன் அல்லது குளக்கோட்டன் என்னும் அரசன் (இவர் காலம் 5-ம நூற்றாண்டு என்பர்) முன்னேச்சுவரத்தில் சில திருப்பணிகளைச் செய்வித்தார். மதுரை, தொண்டைமண்டலம், காரைக்கால், திருச்சிராப்பள்ளி, கூடலூர், மருங்கூர் முதலான ஊர்களில் இருந்து இப்பகுதியில் குடியிருத்தினர். பிராமணர்களை சோழ தேசத்திலிருந்து நீலகண் சிவாசாரியாரையும் அவர் குடும்பத்தினரையும் வேறு பல தொழில் செய்வதற்கு மக்களையும் அழைப்பித்தும் கும்பாபிஷேகம் செய்வித்தார். கோவிலில் நித்திய நைமித்திகத்தை விதிப்படி செய்வதற்கு இக்குடிமக்கள் கற்பிக்கப்பட்டனர். தொழும்பர்கள் செய்யும் பணிவிடைகளில் குறைவு ஏற்படாவண்ணம் மதுரையில் இருந்து தனியுண்ணாப்பூபாலனை அழைத்துவந்து இககோவிலின் பரிபாலன கர்த்தாவாக்கினார்.

முன்னேச்சுவர ஆலயத்துப் பூமிகள் அறுபத்தாறு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு அதிகாரி நியமிக்கப்பட்டார். அவர்களுள் முதலானவர் "சந்திர சேகரமுதலிப் பட்டங்கட்டி", இரண்டாவதாய் உள்ளவருக்கு "பட்டங்கட்டிக் கோறளை" என்றும் ஏனையோருக்கு "அத்துக் கோறளை" என்றும் "பட்டங் கட்டி" என்றும் பட்டங்கள் சூட்டினர். இவர்களில் முன்னிருவருக்கும் முன்னேச்சுவர பரிபாலனம் ஒப்புவிக்கப்பட்டது. மேலும் உட்பிரகாரம் இரண்டாம் பிரகாரம் ஆகியவைகளில் சுவாமி எழுந்தருளப் பண்ணுதல் அவர்கள் மரபினரே செய்தல் வேண்டும் என்றுநியமித்தார். மேலே கூறப்பட்டனவும்மேலும் இன்ன சாதியார் இன்ன இன்ன கிராமங்களில் தங்கினர்என்பதையும் இத்தல மான்மியத்தில் காணலாம்.

## முன்னேச்சுவரமும் இலங்கை அரசர்களும்

1-ம் கஜபாகு (கி. பி. 179) முன்னேச்சுவரத்துக்குத் திருப்பணிகள் செய்தார். ஜெயவர்த்தனபுரியிலிருந்து இலங்கையை ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த 6-ம் பராக்கிரமவாகு மன்னன் இக்கோவிலுக்கு 1448-ம் ஆண்டு சில நிலங்களைத் தாமிரசாசனம் செய்தான். இதைப் பற்றிய குறிப்பு இக்கோவில் கர்பக்கிரகத்திலே வடக்கேயுள்ள சுவரில் காணப்படுகின்றது. 9 ம் பராக்கிரமவாகு கி பி. 1517-ல் தம் இளவரசனுக்கு மின்னலால் உண்டாகிய நோயை நீக்கும் பொருட்டு,முன்னேச்சுவரத்தில்உள்ள விஷ்ணு மூர்த்தியை வழிபட்டு, நோய் நீங்கப்பெற்றான். ஆகவே அம்மன்னன் இக்கோவிலுக்கு சில கிராமங்களைக் கொடுத்து உதவினான். 1753-ம் ஆண்டு கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன், சோழ தேசத்தில் இருந்து சிற்பாசிரியர்களைக் கொண்டு இக்கோவிலுக்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்வித்தான். முப்பத்திரண்டு நெல் விளை நிலங்களைக் குருக்களமாருக்குத் தாமிரசாசனம் பண்ணிக்கொடுத்தான்.


முன்னேசுவரத்தை ஆட்சி செய்த குறுநில மன்னர்கள் பொன் நாணயங்களையும் வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கொழும்புப் பொருட்காட்சிச்சாலையில் காணலாம்.

முன்னேச்சுவர அதிகாரிகள் 12-3-1804-ல் இருந்து இலங்கைத் தேசாதிபதியாகிய நோர்த் பிரபுவுக்கு, தமக்குக் கண்டிமன்னனிடமிருந்து தாமிரசாசனம் மூலம் கிடைத்த நெல் வயல்களைத் தமக்கே விடும்படி கோரிய விண்ணப்பங்கள் இன்றும் உள. அந்த அவர்கள் அவ்வாறு செய்ய முடியாதென்றுகூறி இக்கோவிலுக்கு அருகாமையிலுள்ள பாகத்தை மாத்திரம் நல்கினர். இதைப் பற்றிய விபரங்களை முன்னேச்சுவர தலமான்மியத்தில் காணலாம்.

1875-ம் ஆண்டு ஒரு கனவு மூலம் முன்னேச்சுவரத்தை அடையும்படி, கொழும்பு ஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களுக்கு உத்தரவு கிடைத்தது. அங்கு சென்று கிலமான மண்டபங்களைத் திருத்தினர். இவர் செய்த சிவத்தொண்டினால் இவருடைய நீரிழிவு நோய் இவரை விட்டகன்றது. இவர் இத்தலத்தில் ஆறுகாலப் பூசை ஏற்படுத்தியுள்ளார்.

இன்று முன்னேச்சுவரத்தில் தர்மபரிபாலன கர்த்தாவாக விளங்குபவர் ஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் மகன் ஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்களாவர். இவர் ஆண்டு தொடக்கம் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளை முன்கூட்டியே ஒழுங்கு செய்து ஆண்டு நிகழ்ச்சி சூசிகை அனுப்பிவருகின்றார். இவரே இக்கோவிலின் உரித்தாளரென அண்மையில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

முன்னேச்சுவரத்தில் உள்ள சில சிற்பங்களை வேறெங்கிலும் பார்க்க முடியாது. சக்தி பீடம் மிகச்சிறந்தது. பெரியபுராணத்தில் கூறப்படும் அறுபத்தினான்கு அடியார்களின் தாமிர படிவங்களை இவற்றைச்செய்தசிற்பிகள்வெகுசிறப்பாக வார்த்துத்தந்திருக்கிறார்கள். நவக்கிரகசிலைகள் மிகஅழகாக அமைக்கப்பட்டுள்ளன. முன்னைநாதப் பெருமானையும் வடிவழகியையும் நேரே தரிசித்தால், "நிலவுவதோர் செயல் எனக்கின்றுன் செயலே யென்றும், நினைவார்க்கு வினைகள் எல்லாம் நீங்குந்தானே" என்றும் மணிவாசகர் பாடியிருக்கும் உளப் பாங்கினைப் பெறுவர் என்பது திண்ணம்.



ஒஸ்டர்மில்க் குழந்தைகள் அழகாகவும் ஆரோக்கியமாகவும் திகழ்கிறார்கள்

தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இறும்புச் சத்தும், விட்டமின் டி யும் கொண்ட சுத்தமான பால் ஆகாரம்.

குழந்தை ஆரோக்கியமாகவும்,திடகாத்திரமாகவும் வளர்வதைக் கண்டு ஆனந்தமடையுங்கள்

**ஒஸ்டர்மில்க்**




கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

# ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டங்கள்

— ஜே. பி. குமாரகுலசிங்கம் —

## 5 லட்சம் ஏக்கர் புத்தம் புதிய நிலமாகும்

வருந்திய ஆசியாவுக்கு நிலமே தஞ்சம். நிலத்தைத் திருத்தி நமக்குத் தேவையான உணவு தான்யத்தை நாமே தேடிக்கொள்வதற்கு தண்ணீரைக் குளங்களில் மறித்துக் கட்டி பூமிகளைப் பண்படுத்துவது ஒரு நல்ல வழி. இலங்கை அரசாங்கம், 101 ஆற்றுப் பள்ளங்களில் 8 பெரிய பள்ளங்களைத் தெரிந்தெடுத்து ஆங்கு பெரும் குளங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் அமையும் ஆற்றுப் பள்ளங்கள், வளவகங்கை, ஹெடஓயா, அருவிஆறு, மஹில வட்டவான் முண்டேனி, மஹாவலி கங்கையில் பகுதி, கிரிண்டி ஓயா, கலாஓயா, யான்ஓயா என்பனவாகும்.

கொழும்புத்திட்ட ஒழுங்கின்படி வந்த கனேடியன் என்ஜினியர்மாரும், எங்கள் நீர்ப்பாசன பகுதியாரும் கூடி இரகசியமான முறையில் ஆலோசித்ததனால் இத்திட்டங்களைப் பொதுமக்களுக்கு அறிமுகப் படுத்த அரசாங்கத்திற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இலங்கையின் வருடாந்த வருமானத்தில் ஏறக்குறைய நூற்றுக்கு இருபது விகிதம் (அல்லது 900 கோடி ரூபாய்) உணவுப்பொருள் வாங்குவதற்கு பிற நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. இச்செலவினத்தைக் குறைப்பதற்கு பெரிய குளங்களைக் கட்டி விவசாயத்தை அதிகப்படுத்துவது ஓரளவேனும் உதவுவதாயிருக்கும். இதனல் 457,880 ஏக்கர் நெல் செய்கை கூடுதலாகும் என மதிப்பிடப்படுகிறது. இம்மதிப்பு அணைத் தேக்கங்களிலிருந்து நீர்பாசனத்துக்கு வாய்க்கால்கள் நிறுவப்பட்டு விவசாயம் பெருக வாய்ப்பு ஏற்படும். இதுமுயற்சி பெரும்பாலும் விவசாயிகட்குச் சொந்தமாகவே பகிர்ந்து கொடுக்கப்படும். மொத்தம் 457,880 ஏக்கர் நெல் விளைவுக்கும், 171,402 ஏக்கர் குடியானவர்கள் வசிப்பதற்கும், 23,049 ஏக்கர் வேறு உணவுப் பொருட்கள் பயிரிடவும் கிடைக்கும்.

பழைய காலத்தில் குளங்களை அங்கும் இங்குமாக அமைக்கலானர்கள். தற்காலத்தில் நமக்குக் கிடைக்கக்கூடியதாயிருக்கும் இயந்திரசாதனங்களின் உதவியுடன் பல நோக்குத் திட்டங்களை மேற்கொள்வதற்கு இலங்கையின் மண்வளமும், பருவகாலங்களும் மிகவும் சாதகமாக அமைந்துள்ளன.

ஆனல் பல உபயோகங்களைக் கருதித் தொடங்கும் திட்டங்களில் உடனடியாகப் பிரயோசனம்அடையமுடியாது. பெருந் தொகைப் பணத்தைச் செலவு செய்தே பிறகு பிரயோசனம் காணலாம்.

8 திட்டங்களையும் பூர்த்தி செய்வதற்கு ஏறக்குறைய ரூபாய் 710, 000, 000 தேவைப்படும். 64,000 பொது மக்களின் குடும்பங்களை இத் திட்டங்களில் இருத்திவிடலாம். குடும்பம் ஒன்றுக்கு தலா 2 அல்லது 5 ஏக்கர் படியாக மொத்தம் 256,880 ஏக்கர் பொதுமக்களுக்குக் கிடைக்கும். கல்லோயா பள்ளத்தில் மத்திய வருமான மக்களுக்கு 30,000 ஏக்கரும், 2,500 ஏக்கர் ஐக்கிய சங்கங்களுக்கும், 30 வருட காலத் தவணையோடு கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியேற்றக் கிராமத்துக்கும் 150 குடும்பங்களாக மொத்தம் 150 கிராமங்கள் அங்கு அமைக்கப்பட்டன.

திட்டங்கள் ஒப்பேறினல் நெல் விளைவு நூற்றுக்கு ஐம்பத்தாறு விகிதம் அதிகரிக்கும். கல்லோயா, பொலன்னறுவை, கிரித்தலை, மின்னேரி, கந்தளாய் ஆகிய இடங்களில் விளைந்த நெல்லை வாங்குவதற்கு அரசாங்கத்தின் ஊழியர் முன்வராதுவிட்டதனல் ஏழைக்குடிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்றும் அதனல் வெறுப்படைந்த பலர் தாம் பிறந்து வளர்ந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டதாயும் ஒரு புகார் சொல்லப்பட்டது. இது எந்தளவுக்கு உண்மையோ நாமறியோம்.

இப்படியானபெரும்வேலைத்தளங்களில் வெவ்வேறு வேலைச்சாலைகள் இருப்பதினல், ஒற்றுமையாக முன்னேறுவிட்டால் திட்டங்கள் எல்லாம் குட்டிச்சுவராய்விடும் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தநிலைமை கல்லோயாவில் ஏற்கனவே ஏற்பட்டது. இதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

### ஹெடஓயாப் பள்ளம்

தற்போது மொனராகலையிலிருந்து பொத்துவிலுக்குச் செல்லும் காட்டு மோட்டார்ப் பாதை ஏற்கனவே ஹெட ஓயா பள்ளத்தாக்குத் திட்டத்தின் அங்கமாயிருக்கும் விஷயம் உங்களுக்குத் தெரியுமா? அத்துடன் இக்கன்னிக் காட்டில், விரைவில் கிராமங்கள் பல தோன்றுமென்பதையும் அறிவீர்களா?

பொத்துவில்—மொனராகலை பாதையில், 18-ம் மைல் கல்லில் நின்று இடது பக்கக் காட்டுப் பாதையில் 2 மைல் சென்ருல் ஓர் ஆற்றங்கரையை அடைவீர்கள். இதுதான் ஹெட ஓயா கட்டு என அழைக்கப்படும். இதில் விரைவில் 100 அடி உயரத்தில் ஒரு குளக்கட்டு அமைக்கப்படப் பேசகிறது.

540 சதுர மைலான இப் பள்ளம் கூடிய விரைவில் பெரிய வேலைத்தளமாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. 6 வருடங்களுக்குப் பின்பு நீர் பாய்ச்சலுக்காக 56,000 ஏக்கர் பூமி இங்கு திருத்தப்படும். கரந்த ஓயாவும் இதில் அமையும்.

### நீர்ப்பாய்ச்சலும் மின்சார சக்தியும்

ஹெட ஓயாவும், கரந்தோயாவும், மொனராகலை மலையில் உற்பத்தியாகி, (3,646 அடியிலும், 1831 அடியிலும்) கற்பாறைகளிலும், கைபடாத காட்டிலும் ஓடி, பொத்துவில் அறுகம்பே வாடிவீட்டருகாமையாக சடலில் சேர்கிறது.

ஹெட ஓயா கட்டிலிருந்து ஏறக்குறைய 200 அடிக்குக் கீழே விவசாயத்திற்குச் சிறந்த பூமி உண்டு என பிறநாட்டு நிலவள ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள்.

ஹெட ஓயா விலிருந்து 2 மைலுக்குப் பெரிய வாய்க்கால் அமைக்கப்படும். அவ்விடத்திலிருந்து வலதுவாய்க்கால் பிரதேசம் என (18மைல் நிலமும்) இடது வாய்க்கால் பிரதேசம் என ($7\frac{1}{2}$ மைல் சுற்றளவுள்ள நிலமும்) பிரித்துவிடப்படும். இவ் வாய்க்கால்கள் ஏறக்குறைய 13,000ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சும். இடதுகை வாய்க்கால் கரந்தோயா குளத்தில் வீழ்ந்து அங்கிருந்து மேலும் 11மைல் போவதினல் மற்றும் 12,750 ஏக்கருக்குத் தண்ணீர் வசதி கிடைப்பதாகும்.

ஹெடஓயாவில் தண்ணீர் பாய்ச்சமுடியாத மேட்டுப்பூமிகளுக்கு கரந்தோயா வாய்க்கால்களால் தண்ணீர் கொடுக்கப் படும். இவ்வாய்க்கால், கல்லோயாவின் வலது வாய்க்காலில் விழும்.

இங்கு ஒரு ஜலசக்தி மின்சார நிலையம் நிறுவப்படவிருக்கிறது. இதிலிருந்து ஆண்டுக்கு 746 கிலோ சக்தி மின்சாரம் பெறப்படும்.

### பூமித்திட்டம்

திருத்தப்படும் நிலத்தில் பாதிப்பாங்கான 26,000 ஏக்கர் பூமியை முன்னேற்றமான விவசாய முறைகளைக் கையாளக் கூடிய மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படுமாம். இச்செய்கை பிரச்னைகளுக்கு இடமளிக்குமென்று தங்கள் ஆலோசனையை நீர்ப்பாய்ச்சல் பகுதியார் வெளியிட்டுள்ளார்கள். இதனல் அரசாங்கத்திற்கு செலவு குறைந்தாலும், வேறு புதிய பிரச்னைகள் எழ இடமுண்டு. 1200 மத்தியவருமான மக்கள் நன்மை பெறுவார்கள் என்பது மெய். இவர்கள் சொத்துள்ளவராக இருப்பதினல் எவராவது ஒரு பாராளுமன்றப் பிரதிநிதியோடு சேர்ந்தால், அந்த பாராளுமன்றப் பிரதிநிதிக்கு அடுத்த பொதுத் தேர்தலில் நம்பிக்கையாக வெற்றி கிடைக்கும். இது ஒரு முக்கிய ஆபத்தாகத் தோன்றுகிறது!

5600 குடும்பத்திற்கு, 5 ஏக்கர் நெற்பூமியும், 2 ஏக்கர் மேட்டுப் பூமியும் கிடைக்கும். கல்லோயாவில் சில இடங்களில் பொதுமக்கள் தண்ணீர் இல்லாமல் தவித்து சிலர் திரும்பியும் விட்டார்கள். இப்படியான இடைஞ்சல்களை தவிர்ப்பதானல் கிணறுகளை முதலிலே அமைத்துக்கொடுக்க வேண்டியிருக்கும்.

56,000 ஏக்கரில் (ஏக்கருக்கு 40 புசல் வீதம்) மொத்தவிளைச்சலில் ரூபாய் 15,800,000 பெறலாம். ஓர் ஏக்கர் செய்வதற்கு ரூபாய் 200 வேண்டும். ரூபாய் 12 ஒரு புசலுக்கானல் ஓர் ஏக்கரின் விளைவு ரூபாய் 480 ஆகும். 19,600ஏக்கர் மேட்டுப் பூமியில் ஓர் ஏக்கருக்கு ரூபாய் 50 பிரயோசனம் பெற்ருல் மேலும் ரூபாய் 980,000 இத்திட்டத்தில் வருடாந்தம் கிடைக்கும்.

வெள்ளத்தண்ணீர் 65,000 "குயுசெக்" இப்பள்ளத்தில் உற்பத்தியாகும். (1 குயுசெக் 40 ஏக்கர் நெற்பூமி செய்வதற்குப் போதும்) ஆகையால் கூடிய வரையில் வெள்ளத்தை தடுப்பதற்கு ஏற்கவே அணைக்கட்டுகள் கட்டப்படடிருப்பதுநலம். இத்திட்டத்தில் 6பெரும் குளங்கள் அமைக்கப்படும். இவை யாவற்றிலும் எந்நேரமும் தண்ணீர் இருக்கும். பெருங்குளங்கள் இவை: யல்பொத்தை, வாகுகலை, நாவின்னை, பாணமை, வத்தேகமை, கிதுவானை, சிறியாக்குளம், செங்கமுமை, ஒருட்டைகுளம் என்பன.

இப்பள்ளத்தில் 1,120,000 புசல் அரிசி விளையும் என எதிர் பார்க்கப்படுகிறது. அதனல் அரிசி வாங்குவதற்கு வெளி நாடுகளுக்குப் போகும் பணத்தில் 7 . 5% மிச்சம்பிடிக்கலாம். இதைவிட கூடிய விலைக்கு தற்போது அரிசி வாங்கும் பணத்தில் 25 கோடி ரூபாய் மீதம் ஆகும்

100, 000 தொழிலாளர்கள் இவற்றினல் நன்மையடைவார்கள் என்பதில் சிறிதளவேனும் ஐயமின்று.

### கிருந்தி ஓயா

சாகுபடி செய்யப்படும் பூமிக்குமேல் மிச்சமான தண்ணீர் இப்பள்ளத்தில் உண்டு.

கிருந்திஓயா 4,000 அடிஉயரமான ஹபுத்தளை மலையில் உற்பத்தியாகி ஏறக்குறைய 50மைல் ஓடி தெற்கில் சென்று கடலில் வீழ்கிறது. இதன் இரண்டு கிளைகள், குடாஓயாவும், மஹாஓயாவுமாகும். இவைகளை மறித்து அணைக்கட்டுகள் கட்டப்படவிருக்கின்றன.

இப்பகுதியில் வசிக்கும் மக்கள் சேனைச் செய்கையின் மூலமே தங்கள் வாழ்க்கையை நடத்துகிருர்கள். சேனைச்செய்கையைத் தடைசெய்தால்தான் இத்திட்டத்தைச் சரிவரச் செய்து பெரும்பாலான மக்களுக்கு தொழில்காட்டமுடியும். சேனைச்செய்கையால் காடு இல்லாமல் போய்விடினும்மண்,

(4-ம் பக்கம் பார்க்க)

# நமது நூல் நிலையம்

### சகுந்தலை வெண்பா

ஆசிரியர்: ச. நடேசபிள்ளை (இலங்கை முன்னுள் அமைச்சர்)

வெளியீடு: இராமநாதன் கழகம், சுன்னுகம், இலங்கை. விலை ரூபா 2-50.

உலகப் பெருமைபெற்ற காளிதாசரின் சகுந்தலை நாடகத்தை அறிஞர் நடேசபிள்ளை சகுந்தலை வெண்பாவாக அழகு தமிழில் தந்திருக்கிருர். பிறப்புக்காண்டம், காதற் காண்டம் துன்புறு காண்டம், இன்புறு காண்டம் என நான்கு காண்டங்களாகப் பிரித்து, சகுந்தலையின் கதையை ஆதியிலிருந்து சொல்லுகிருர். நளவெண்பாவை இந்நூல் நினைவுபடுத்துகின்றதென்றும் கூறலாம்.

"புதிய காப்பியத்தைத் தந்தாலும் பழைய கதையினையும் பழைய புலவர்களையும் பழைய நடையினையும் பழைய பாவினையும் வாழவைக்கின்ருர். கம்பனும், புகழேந்தியும் தம் வள்ளல்களுக்கும் தம் காப்பியங்களில் நிலையான இடந்தந்தனர். அவ்வாறே நண்பர், இராமநாதருக்கும் இக்காப்பியத்தில் இடந்தருகின்ருர். புதிய காப்பியம் எழுதினலும்... ஏதோ ஒரு பழங்காப்பியத்தைப் பதிப்பிப்பது போன்ற எண்ணத்தை நம் மனத்துள் வளர்த்துவிடுகின்ருர். புகழேந்தியின் நடையிலே அவ்வளவு தொலைவு ஊறிப் பழுத்துள்ளார் எனலாம்" என்று இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள பேராசிரியர் திரு தெ. பொ. மீனட்சிசுந்தரன் தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"அரும்பின்ற முல்லையுமை விழுங்கோங்கும்
கரும்பேய்க்கும் மென்பனையுங்காமர்—கரும்பூதும்
செந்தமிழின் தீம்பண்ணுஞ் செங்கு முதவாயிதமும்
அந்திப் பிறையு முண்டாங்கு"
"பூவுலகில் தந்தியிலாப் பேச்சுக் கணப்பொழுதில்
மேவுதல் போல் நாடுபல மீதூர்ந்து—தாவும்
மனத்தை யலையடங்கு மாகடல் போற் செய்வார்
நினைத்தவெலா மாகும் நிகழ்ந்து"

இவைபோன்ற வெண்பாக்களில் ஆசிரியரின் சொந்தக் கற்பனையின் வளத்தைக் காண முடிகிறது.

காளிதாசரின் சகுந்தலை நாடகத்தை சகுந்தலை வெண்பாவாகஆசிரியர் அளித்துள்ள இச்சிறு காப்பியம் இன ஒருமைப் பண்பாட்டுக்கும் உதவக்கூடியதாக இருக்கிறது. இலங்கையில் சமீபகாலமாக நூல்கள் பல வெளிவந்துகொண்டிருக்கின்றன. இது ஈழத்தில் இலக்கிய வளர்ச்சியையே காட்டுகிறது. சகுந்தலை வெண்பா அண்ணுமலை நகரில் அரங்கேற்றம் செய்யப்பட்டபோதிலும் இலங்கையில் வெளிவந்துள்ள சிறந்த நூல்களுள் இதை தலையானதாகக் கொள்ளலாம்.

—"எம். ஆர்."

### அழியாத நினைவு
(சிறுகதைத் தொகுப்பு)

### எங்கிருந்தாலும் வாழ்க
(சிறுகதைத் தொகுப்பு)

ஆசிரியர்: "அமரன்". விலை ஒவ்வொன்றும் ஒரு ரூபாய்.

### கோமாளித் தோழர்கள்
(சிறுவர் நாடகம)

ஆசிரியர்: கே. கண்ணுசாமி. விலை 60 சதங்கள்.

### திருந்திய உள்ளம்
(சிறு நாடகம்)

ஆசிரியர்: ப. தேவகுரு. விலை 60 சதங்கள்,

### பங்களாத் தோட்டம்
(சிறுகதைத் தொகுதி)

ஆசிரியர்: கே. கண்ணுசாமி விலை 40 சதங்கள்.

வெளியீட்டோர்: மாணவர் கலா நிலையம், விருதுநகர்.

'அழியாத நினைவு' என்னும் தொகுதியில் விடிந்தது தாமரை மலர்ந்தது, கதவு திறந்தது. மனவழுக்கல், அழியாத நினைவு, என் கணவர், கண்மூடி உலகம், நெல்லும் பதரும், கதை முடிந்தது ஆகிய ஒன்பது சிறு கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் யாவும் தமிழ்நாடு, ஞாயிறு மலரில் வெளிவந்தவை. 'அலை ஓய்ந்தது' என்ற தொகுதியில் மணம், எங்கிருந்தாலும் வாழ்க, அலுப்பு, காதலிப்பதுஎளிது, திரைவிலகியது,உள்ளழுகும் வெளிப்பூச்சும், அழவில்லை சிரித்தேன், அவன் தெய்வம், அலை ஓய்ந்தது ஆகிய ஒன்பது கதைகள் உள்ளன.

இரண்டு தொகுதிகளிலும் காதல் கதைகள் தான் இடம் பெற்றுள்ளன. வார்த்தை ஜாலங்கள் இன்றி எளிய இனிய நடையில் ஆசிரியர் தமது கதைகளைப் படைத்துள்ளார். மக்களுக்கு உபதேசம் செய்யவேண்டும் என்ற ஆசிரியரின் ஆசை பல கதைகளிலும் தெளிவாகத் தெரிகிறது.

இரண்டு தொகுதிகளும் "படித்துச் சுவைக்கலாம்."

கோமாளித் தோழர்கள் பழனி, திருப்பதி ஆகிய இரு சிறுவர்களும் படிப்பைத் தவிர திருட்டு மற்றும் சகல கலைகளிலும் கைவந்தவர்களாக விளங்குகின்றனர். பழனிக்கு அவன் மாமா கொடுத்த பேனவை பழனியின் மாமாவிடமே விற்கச் செல்லும் திருப்பதி, அப்பனிடமே கொள்ளையடிக்கச்செல்லும் பழனி, அவர்களின் திருவிளையாடல்களுக்கு மசியாத திருப்பதியின் அப்பா நாகலிங்கம், பழனியின் அப்பா தர்மராஜர், ஆங்கில ஆசிரியர் திருப்பதி வீட்டுவேலைக்காரன் முதலிய பாத்திரங்களைக் கொண்ட இந்த நாடகம் நகைச் சுவையாக எழுதப்பட்டுள்ளது. சில இடங்களில் சினிமா வசன 'வாடை' வீசுகிறதெனினும் பாடசாலை மாணவர்கள் நடித்துக்காண்பிக்கக்கூடிய நல்ல நாடகம்.

### திருந்திய உள்ளம்

இதுவும் சிறுவர் நாடகம் தான். மிராசுதார் குமரப்பர், அவர் மகன் பாண்டியன், வேலைக்காரன் குமரப்பன், வேலப்பனின் மகன், பள்ளிக்கூட ஆசிரியர் ஆகியோரைப் பாத்திரங்களாகக் கொண்ட இச்சிறு நாடகம் பெரும்பாலும் சம்பாஷணையாகவும் பிரசங்கமாகவுமே இருக்கிறது. தமிழ் நாட்டில் காங்கிரஸ ஆட்சியையும் இந்தியாமீது சீனர் படையெடுத்துள்ளதால் நாட்டுக்கு வந்த ஆபத்தை தடுப்பதற்கு மக்களை அரசாங்கத்துக்குத் தூண்டுவதும்தான் நாடகத்தின் நோக்கம் தமிழ் நாட்டு பாடசாலைப் பிள்ளைகளுக்கான ஒரு பிரசார நாடகம்.

### பங்களாத் தோட்டம்

பங்களாத் தோட்டம், தாய் சொல்தட்டாதவன், யார் தியாகி ஆகிய மூன்று சிறுகதைகளைக்கொண்டது இந்நூல் சிறுவர்களின் வாழ்க்கையை மையமாககொண்ட இக்கதைகள் படிப்பதற்குச் சுவையாகவும் சிறுவர்க்குப் புத்துணர்ச்சியைக் கொடுக்கக்கூடியதாகவுமுள்ளன. அப்பாவுக்கு மகன் உபதேசம் செய்யும் 'சினிமா பாணி' 'பங்களாத் தோட்டம்' என்ற கதையிலிருந்தபோதிலும் சிறுவர்கள் வாங்கிப் படிக்கக்கூடிய நூல் 'பங்களாத் தோட்டம்'.

—'தேனீ'

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு தை மீ 20௳ (2-2-64)

# உண்ணாவிரதம்

பலநாள் பட்டினி கிடந்தவர் போன்ற ஒட்டி உலர்ந்த வயிறு. மெலிந்த உருவம். தளர்ந்தநடை; இடுப்பில் ஒரு முழத்துண்டு இந்த உருவம், "உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்" என்று அறிவித்தது. உலகமே திடுக்குற்றது; பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அச்சமடைந்தது; பிரிட்டிஷ் மந்திரிசபை அவசரமாகக் கூடி ஆலோசனை செய்தது. அந்த உருவத்துக்கு அவ்வளவு சக்தி அத்தகைய சக்தியுடைய மனிதர்தான் மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி.

இப்பொழுது யார் யாரோவெல்லாம் உண்ணாவிரதம் இருக்கின்றனர். எதுஎதற்கெல்லாமோ உண்ணாவிரதமிருக்கின்றனர்

காந்திஜி தனது சுயநலத்துக்காக உண்ணாவிரதம் இருக்கவில்லை. நாட்டின் விடுதலைக்காக, நாட்டுமக்களின் ஒற்றுமைக்காக, சமூக ஐக்கியத்துக்காக, எதிரியின் துப்பாக்கிக் குண்டுகளையும் வெற்றிகொள்ளக்கூடிய ஆத்மபலத்துக்காக அவர் உண்ணாவிரதமிருந்தார். "உண்ணாவிரதம் இருக்கும் பொழுது ஏனைய புலன்களையும் அடக்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் மனமும் எண்ணமும் தூய காரியங்களையே மனத்தில் கொள்ளவேண்டும்" என்று காந்திஜி, உண்ணாவிரதத்தின் தத்துவங்களை சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். "நல்ல முறையில் போதிய சிந்தனையின்பின் நல்ல காரியத்துக்காக செய்யப்படாத உண்ணாவிரதம் சிறிதளவாவது பயனைத்தராததுடன் ஈற்றில் சிரிப்புக்கிடமாகவே முடியும்" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆயுதபலம் படைத்த ஒரு சாம்ராஜ்யத்தையே எதிர்த்து ஆத்மபலத்தைமட்டும் துணைக்கொண்டு அகிம்சை இயக்கத்தை ஆரம்பித்து அதன்மூலம் வெற்றியும் கண்டவர் காந்திஜி. அகிம்சை இயக்கத்தின் ஒரு அம்சமாகவே உண்ணாவிரதத்தை அவர் கைக்கொண்டார். அநீதி இழைக்கப்படுகிறதென்பதைக் கண்டதும், அநீதியான சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டதும் அதை எதிர்த்து அவர் உண்ணாவிரதமிருந்தார் தாழ்த்தப்பட்டமக்களுக்குத் தனித்தொகுதி ஒதுக்கி அதன் மூலம் இந்திய மக்களைப் பிளவுபடுத்த ஆங்கிலேய ஆட்சி முயற்சி செய்தபோது, அதை எதிர்த்து, சமூக ஒற்றுமைக்காக, சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்து வெற்றியீட்டினார்.

அநீதியை எதிர்த்தும், ஒற்றுமையை விரும்பியும், பிரிவாற்றாமையாலும் முற்காலத்திலும் தம்மையே தாம் வருத்திக்கொள்ளும், அழித்துக்கொள்ளும்முறை உலகில் இருந்துவந்திருக்கின்றது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. வடக்கிருத்தல், மடலேறுதல் போன்றவைகள் இவற்றுள் சில எனலாம். சமீபத்தில் தென்வியட்நாமில் பௌத்தபிக்குகள் தம்மீது பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்துக்கொண்டதுபோல் முன்னாளில் மதுரையில் நீண்டுயர்ந்து வளர்ந்துள்ள கோயில் கோபுரங்களின் மீது ஏறிநின்று கீழே குதித்து உயிர் மாய்த்து, அக்காலத்தில் அரசாண்ட மன்னனின் தீர்ப்புக்கு ஆட்சேபம் தெரிவித்துக் கொண்டதாகவும் கூறப்படுவதுண்டு.

ஆனால் சமூகத்திற்காக, நாட்டுக்காக, ஒரு பெரிய வல்லரசையே எதிர்த்து உண்ணாவிரதம் இருந்து அகிம்சை என்னும் ஆயுதத்தை உபயோகித்தவர் உலகில் காந்தி மகாத்மா ஒருவர்தான். அவருக்குப்பின் அவரைப் பின்பற்றி சமூகநலனுக்காக உண்ணாவிரதமிருந்து வெற்றியீட்டியவர் யாருமிலர் என்றே சொல்லலாம்.

ஆந்திராவைப் பிரிக்க வேண்டுமெனக்கோரி பொட்டி ஸ்ரீ ராமுலுநாயுடு உண்ணாவிரதம் இருந்து மாண்டார். அதைத் தொடர்ந்து கிளர்ச்சியும் கலகமும் தோன்றியது. நாடும் பிரிந்தது. நம் நாட்டில் தமிழ்மொழிக்கும் அந்தஸ்து கொடுக்கவேண்டுமென்று சிங்களம் மட்டும் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த ஷரத்தை நீக்கிவிடக்கோரி பார்லிமெண்ட் கட்டடத்தில் இருவர் உண்ணாவிரதமிருந்தனர். அவர்கள் விருப்பப்படியே ஷரத்து நீக்கப்பட்டது. நாட்டில் கிளர்ச்சியும் கலகமும் மூண்டது. சமூகத்தில் வேற்றுமையும் பிளவும் ஏற்பட்டது. இன்றும் முன்னேற்றமில்லாதிருக்கின்றது. விலைவாசி உயர்வை எதிர்த்து கால்நடையாக கொழும்பு நோக்கிப் புறப்பட்ட விவசாயிகள் ஊர்வலத்தை பொலிசார் கலைத்துவிட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து 6 தினங்களாக ஒருவர் உண்ணாவிரதமிருந்தார். இப்பொழுது தமக்கு பதவியளிக்காததற்காக தமிழ் ஷரத்தை நீக்கக்கோரி மற்றொருவர் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறார். தமிழ்நாட்டில் 'தமிழ்நாடு' எனப் பெயர் வைக்கவேண்டுமெனக் கோரிசங்கரலிங்கனர் உண்ணாவிரதமிருந்து மாண்டார்.

இவைதவிர தமிழுக்கு சம அந்தஸ்து கோரி உண்ணாவிரதமிருந்து பின்னர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பலரின் வற்புறுத்தலால் அதைக் கைவிட்டவரும் ஒருவர் உளர். தனிப்பட்ட காரணங்களுக்காக உண்ணாவிரதமிருந்து ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வற்புறுத்தி உண்ணவைத்த சம்பவங்களும் உண்டு.

இந்த உண்ணாவிரதங்கள் எல்லாமே நற்பயனை அளித்தனவா? கேலிக்கிடமானவையா? என்பதை நாம் விரிவாக ஆராய வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவற்றிற்கு காலம் பதில் சொல்லும். மகாத்மா உலகில் ஒருவர்தான்.

நாபாஸர் - 7

# ரஸானுபவம்: சில இலக்கண நியதிகள்

— வி. என். பி. —

ஸப்தம். ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்றவை ஐம்புலன்களாகும். இவைமுறையே ஒலி, ஊறு (தீண்டல்). ஒளி, சுவை, நாற்றம் எனவும் கூறப்படும். செவி, மெய் (உடம்பு), கண், நாக்கு, மூக்கு என்ற ஐம்பொறிகளினால் இவைமுறையே உணரப்படும்.

இங்கு ஸப்தம் என்பதை முதலில் குறிப்பிட்டதைக் கவனிக்கவேண்டும்.

காதால் கேட்கிறோம், மெய்யால் தீண்டுகிறோம். கண்ணால் பார்க்கிறோம். நாக்கால் சுவைக்கிறோம், மூக்கால் மணக்கிறோம். இவை எல்லாம் உள்ளத்தில் வெவ்வேறு உணர்ச்சிகளை உண்டு பண்ணுபவை. ஆயினும், செவியால் ஏற்படும் ஸப்தம் அல்லது ஒலி என்பதே முதன்மையாக நிற்கிறது.

தொட்டிலில் புரண்டு கிடக்கும் பச்சிளம் பாலன் கடினமான ஓசையைக்கேட்டுத் திடுக்குறுவான். இன்னோசையைக் கேட்டு இன்புற்று மகிழ்வான். உயிர்த்துடிப்பு தோன்றிய காலத்தில் அவனுக்கு முதலாவதாகத் தோன்றுவது ஒலி உணர்ச்சி. அதற்குப் பின்புதான், நாற்றம், சுவை முதலியன. தோன்றுகின்றன. மனிதகுலம் மட்டுமன்றி, வேறு ஜீவபிராணிகளை எடுத்துக்கொண்டாலும் அவை முதலில் ஒலி உணர்ச்சிக்கே வயமாகின்றன. இது பற்றியே திருவள்ளுவரும் 'செவிக் குணவு' என்று கூறுகிறார். உடலையும் உயிரையும் ஒட்டிவைப்பதற்கு ஆகாரம் எத்தகைய முக்கியமானதோ, அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது செவிக்குணவு.

காதால் கேட்டுச் சுவைக்கும் உணர்ச்சியே மேலானது. இனி இந்த செவி உணர்ச்சியும் காலவர்த்தமானங்களைப் பொறுத்திருக்கிறது. என்பது அனுபவரீதியாகப் பெறப்படுகிறது. ஆகையினால்தான் சங்கீத ஆசிரியர்கள் இன்ன இன்ன காலத்தில், இன்ன இன்ன நேரத்தில் இன்ன இன்ன ராகங்களைப் பாடினால் அல்லது கேட்டால் இன்ன இன்ன ரஸானுபவங்கள் ஏற்படும் என்று இலக்கணம் கூறியிருக்கிறார்கள்.

கர்நாடக சங்கீதத்துக்கு தொல்காப்பியனார் வேங்கடமகி என்பவர். அவர் தமது 'சதுர்த் தண்டிப் பிரகாசிகை' என்ற அபூர்வமான நூலில் ராகலட்சணங்களையும் கூறி, எந்த ராகம் எந்த நேரத்தில் பாடினால் சுவை மிகும் என்பதையும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

வெள்ளெனப் பொழுது புலரும் நேரம், காக்கை குருவிகள் கண் விழித்து எழும் சமயம், வையம் முழுவதும் ஆனந்த அமைதியில் மூழ்கியிருக்கிறது. அந்த சமயத்தில் ஒருவர் பூபாள ராகத்தைப் பாடுவாராகில் அதுபாடுபவருக்கு மட்டுமின்றி கேட்டுக்கொண்டிருப்போருக்கும் ஓர் எல்லையற்ற ஆத்ம சாந்தியைக் கொடுப்பதாயிருக்கிறது இந்தப் பூபாள ராகம் வேறு எந்த நேரத்திலும் பாடலாகாது என்பது சாஸ்திரிய சங்கீதத்தின் நியதி. உண்மையில் அது மத்தியானத்திலோ சாயங் காலத்திலோ பாடப்பட்டால் சுவை இருக்காது. கசப்பாய் இருக்கும்.

உச்சிப்பொழுது சாயும் நேரம் உலகம் எல்லாம் ஒரு வகை மோன நிலையில் கட்டுண்டு இருக்கிறது. நாகாஸ்திரப பிரயோகத்தால் உண்டான மயக்கம் போல. இந்த நேரத்தில் மத்திய மாவதி, மணிரங்கு. ஸ்ரீ ராகம் முதலியவற்றைப் பாடியவுடன் (அல்லது கேட்டவுடன்) மயக்கம் மீதூருகிறது.

இந்த வண்ணமாக எந்தெந்த நேரத்தில் எந்தெந்த ராகங்கள் அதிகம் சுவையை உண்டு பண்ணுகின்றன என்றும் எப்பொழுது பாடினால் அவற்றின் முழுப் பிரகாசிகையும் பிரபலமாகும் என்றும் வேங்கடமகி அவர்கள் கூறியுள்ளார்

முறையாக சங்கீதம் பயிலுபவர்கள் இந்த லட்சணங்களை உணர்ந்து ரஸானுபவம் பிறக்கும் முறையில் இசைப்படுத்த வேண்டும். இக்காலத்தில் இந்தக் கட்டளையை மேற்கொள்ளுபவர்கள் மிகச்சிலர். சங்கீதம் செய்பவர்கள் இந்த நியதிகளை மீறுது வழிப்படுவார்களாகில் ரஸானுபவம் தானே வந்து சேர்ந்து விடும்.

வட இந்திய சங்கீதக் கலைஞர்கள் இந்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் இன்ன நேரத்தில் இன்ன ராகம் தான் பாடவேண்டுமென்று விரதம் அனுட்டிப்பார்கள். தான்ஸேன் என்ற இசைப் பெரியார் நினைத்த மாத்திரத்தே மழையை வருவிக்கக்கூடிய தன்மை வாய்ந்தவராய் இருந்தார் என்றால் இசையின் மகிமை தான் என்னே!

ஆனால் அது துற்பிரயோகத்துக்கு இடம் தராது.

சுதந்திரம்

தங்கள் கையினால் நூற்ற நூலைக் கொண்டு நெசவு செய்த ஆடையினால் தங்கள் மானத்தை மறைக்க ஒவ்வொரு இந்தியனும் விரதமெடுக்க வேண்டும். அப்பொழுதுதான் சுதந்திரத்தின் பெருமை நமக்குப்புலப்படும்.

— காந்தி அடிகள்

# ஆற்றுப்பள்ளத்தாக்கு..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குளங்களுக்குச் சென்று, குளங்களை நிரப்பிவிடுவதனால் தண்ணீரும் குறைந்துவிடும்

இங்கு 18 குளங்களில் விவசாயத்துக்கு தண்ணீர் உண்டு. ஆனால் 187 குளங்கள் உடைத்து தண்ணீர் தேக்கி வைக்கமுடியாதபடி பழுதடைந்த நிலையில் கிடக்கின்றன. பழுதடைந்த குளங்கள் யாவற்றையும் திருத்தி அமைத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கருக்கு நீர்ப்பாய்ச்சல் வசதி கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்திட்டத்தின் மூலம் 35,000 ஏக்கர் பூமியை நெற்செய்கைக்கு எடுக்கலாம். தற்போது திருத்தப்பட்டுள்ள 84,000 ஏக்கர்களுக்கு இருபோகங்கள் செய்வதற்கு ஏராளமான தண்ணீர் கிடைக்கும்.

காட்டையழிக்கும் 35,000 ஏக்கரையும், இருபகுதிகளாக பிரிக்கவேண்டுமென நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தர்கள் கூறுகிறார்கள். முதல்பகுதியில் 26,800 ஏக்கரில் திட்டவட்டமாக ஒரு போக வேளாண்மை செய்யலாம். இரண்டாம்பகுதியில், 8,200 ஏக்கரை இருபோகமாக வேளாண்மைக்குப் பயன்படுத்தலாம்.

இரண்டுபோக வேளாண்மை செய்யப்படும் 8,200 ஏக்கரிலும் ஏக்கருக்கு வருடாந்தம் 70 புசல் வீதம் விளைவிக்கலாம். ஒரு போகம் செய்யும் 26,800 ஏக்கரிலும் வருடாந்தம் ஏக்கர் ஒன்றுக்கு 40 புசல் வீதம் விளைவு பெறலாம். இவைகள் மூலம் 11,112,000 ரூபா வருடாந்த லாபம் பெறமுடியும்.

வருடா வருடம் வெள்ளச் சேதத்துக்குள்ளாகும் இப்பள்ளம், குளங்கள் கட்டியபின் எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் இருக்கும். குளங்கள் பெருகி வரும் வெள்ளத்தை தாங்கிக் கொள்ளும். 1,667 மக்களின் குடும்பங்களுக்கு நீர்வளமும், நிலவளமும் அமையும். ஏறக்குறைய 907,000 புசல் அரிசி இப்பள்ளத்தில் விளையும் என மதிப்பிடப்படுகிறது.

அரசாங்கத்தின் ஆராய்ச்சியின்படி ஒரு ரூபாய் இத்திட்டத்தில் செலவு செய்தால் ரூபாய் 3-30 சதம் பெறலாம். வவுனிக்குளத்தின் மேற்குப்புறமும், மாணிக்க கங்கையின் கிழக்குப்புறமும், இருப்பதனால் கிருந்திஓயாப்பள்ளம் முன்னேறக்கூடிய வழிவகைகள் இருக்கின்றன. இத்திட்டம் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும்.

ஊவா மாகாணத்திலும் கிழக்குமாகாணத்திலும் இருக்கும் நான்கு ஆறுகளைச்சேர்த்து அத்துடன் மூன்று பெரிய குளங்களையும் சேர்த்தால்தான் இத்திட்டம் ஒப்பேறும். அத்துடன் இது சிங்களவரையும் தமிழரையும் ஒத்துவாழச்செய்யும் ஒரு திட்டமுமாகும். சிங்களவரையும் தமிழரையும் ஒற்றுமைப் படுத்தியிருக்கும் இத்திட்டம் 800 சதுரமைல் பள்ளமாகும். நீர்வளமும், நிலவளமும் பொருந்திய இத்திட்டம் இலங்கை வாழ் மக்கள் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு மிக மிக உதவியாக இருக்கும்.

அணைக்கட்டுகள் தேவையான இடத்திற்குக்கட்டப்படும். இவைகளிலிருந்து தாய்வாய்க்கால்களும், கிளைவாய்க்கால்களும் அமைக்கப்படும்.

மலைநாடானபடியினால் போக்குவரத்து கஷ்டங்கள் ஏற்படுவது இயல்பு. இதை நீக்குவதற்கு ஏற்கனவே பாதைகள் அமைக்கவேண்டியது அவசியம். இல்லாவிடில் திட்டத்து வேலைக்குரிய பொருட்களைக் கொண்டு செல்ல முடியாமல் இருக்கும்.

பொருளாதாரக்கஷ்டமுள்ள மக்கள் இங்கே சீவ்பபதனால் அரசாங்கம், இவர்களையே திட்டத்து வேலைகளுக்கு எடுப்பது அங்கு வேலையில்லாத்திண்டாட்டத்தை நீக்குவதுமல்லாமல் பொருளாதார முன்னேற்றத்துக்கும் அது உதவியாக இருக்கும்.

(இக்கட்டுரை அடுத்த இதழில் முற்றுப்பெறும்)

---

## இராமாயணப் படிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் கோயிலில் இராமாயணப் படிப்பு தினமும் மாலையில் நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்படுகிறது.

# உலகமேடை

டி.எம்.எம்

## ஏராள சம்பவங்கள்

சமீப காலத்தில் சர்வதேச அரங்கில் ஏராளமான காட்சிகள் தென்பட்டன. பனமா—அமெரிக்கத் தகராறு, கிழக்காபிரிக்காவில் கென்யா, உகண்டா, தங்கனீகா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட ராணுவக் கலகம், ஸான்ஸிபாரில் ஏற்பட்ட ராணுவப்புரட்சி, மலேஷியாத் தகராறு சம்பந்தமாக அமெரிக்கமந்திரி திரு. ராபெர்ட் கென்னடியின் தென்கிழக்காசிய விஜயம், போர்ணியோ எல்லையில் போர்நிறுத்தம், பாங்காக்கில் நடைபெறவிருக்கும் முக்கூட்டு மகாநாடு, இந்திய–பாகிஸ்தான் கலவரம், ஜோர்டான் நதி பற்றிய கெய்ரோ மகாநாடு, ஐ. நா. பாதுகாப்புச் சபையில் காஷ்மீர் பிரச்னை, சீனப்பிரதமரின் ஆபிரிக்கச் சுற்றுலா, சைப்ரஸ் நெருக்கடி, தென்வியட்னாம் ராணுவப் புரட்சி, சீனவுக்குப் பிரான்ஸின் அங்கீகாரம், ஜெனீவாவில் ஆயுதப்பரிகரண மகாநாடு, வானவெளியில் அமெரிக்க—ரஷ்ய சாதனை போன்றவை இவற்றில் சில.

நமது சின்னப்பத்தியில் இவ்வளவையும் அடக்கமுடியாது. எனவே இவற்றில் எந்தவிஷயத்தைத் தேர்ந்தெடுப்பது என்ற பிரச்னை குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் முக்கியத்துவம் பொருந்தியதாய் அமைந்துவிட்டது தான் இதில் விசேஷம். எனவே ஒன்றிரண்டு விடயங்களை மட்டுமே இங்கு ஆராய இடமுண்டு.

★

## கிழக்காபிரிக்கா

கடந்த 20 தினங்களில் ஏற்பட்ட சர்வதேசப் பிரச்னைகளில் கிழக்காபிரிக்காச் சம்பவங்கள் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவை. இதற்கு முன்னோடியாய் இருந்தது ஸான்ஸிபாரில் நடைபெற்ற ராணுவப்புரட்சி.

ஸான்ஸிபாருக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டபோது சர்வதேசக் கவனத்தை அது பெரிதும் கவர்ந்துவிடவில்லை. ஒரு சின்னஞ் சிறிய தீவு. 3 லட்சம் மக்கள் வாழும் ஒரு சுண்டைக்காய் நாடு என்றே அனைவரும் கூறினர். ஆனால் அந்நாட்டில் ஏற்பட்ட ராணுவப் புரட்சி சர்வதேசக்கவனத்தை நேரடியாக ஈர்த்துவிட்டது. எத்தனையோ நாடுகளில் ராணுவப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது ஆயினும் அவற்றின் எதிரொலிகள் சிறிது நாட்களில் அடங்கிவிடுவதுண்டு. ஆனால் ஸான்ஸிபாரில் ஏற்பட்ட ராணுவப்புரட்சியின் எதிரொலி இன்னும் அடங்கவில்லை. இதற்கு இரு முக்கிய காரணங்கள் இருக்கின்றன.

அந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் புரட்சியில் கம்யூனிஸ்ட் வாடை வீசுகிறது. ஏதோ ஒரு விதத்தில் கியூபா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் மறைமுகமாக ஸான்ஸிபாருடன் தொடர்பு கொண்டிருப்பது போல் தெரிகிறது. புரட்சியை நடத்தியவர் கியூபாவில் பயிற்சிபெற்றவர். மற்றும் சில தலைவர்கள் ரஷ்யாவில் தங்கியவர்கள். புரட்சிக்குப் பின் சீனத் தூதராலயம் ஸான்ஸிபாரில் திறக்கப்பட்டிருக்கிறது அந்த நாட்டில் தலையிடவேண்டாம் என ரஷ்யா பிரிட்டனை எச்சரித்திருக்கிறது. இவை சிறிய காரணங்கள். ஆயினும் மறைமுகமான ஏதோ ஒன்று இந்தப் புரட்சிக்கு அத்திவாரமாய் அமைந்திருக்கிறதென்பது மட்டும் உறுதி. அத்துடன் சாம்ராஜ்யத்தில் ஸான்ஸிபார் முதலாவது சிகப்பு நாடாக விளங்குகிறது. இது எவ்வளவு தூரம் சாத்தியமென்பதும் தெரியவில்லை.

## பூகோள அமைப்பு

இரண்டாவது முக்கிய காரணம் அதன் பூகோள அமைப்பு கிழக்காபிரிக்காவில் கெடுபிடி யுத்தத்திற்கு வாய்ப்பான கேந்திர ஸ்தானத்தில் அது அமைந்திருக்கிறது.

சுற்றிலும் கடல் சூழ்ந்த ஸான்ஸிபார், ஸம்பா தீவுகளில் எவராவது ஒரு ராணுவ வத்தளத்தை வைத்துக்கொண்டால், கிழக்காபிரிக்க நாடுகளை இஷ்டம் போல் பயமுறுத்திவரலாம்.

ஸான்ஸிபாரில் புரட்சி ஏற்பட்ட சில தினங்களுக்குள்ளாகவே தங்கனீகாவில் கலகம் ஏற்பட்டது. இந்தக் கலகம் ஏற்பட்ட சந்தர்ப்பம் தான் வெகுவான சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறது. ஸான்ஸிபாரில் அமைதியை நிலைநாட்ட, 300 தங்கனீகா பொலிஸாரை அனுப்பி உதவும்படி ஸான்ஸிபாரின் புதிய ஆட்சி கேட்டிருந்தது. இந்த 300 பேரும் ஸான்ஸிபாருக்கு வந்தவுடன் தங்கனீகாவில் கலகமேற்பட்டது. கலகத்துக்கு அரசியல் நோக்கமில்லையெனக் கூறப்பட்ட போதிலும், கிழக்காபிரிக்காவில் 2 வாரங்களில் தொடர்ச்சியாக ஏற்பட்ட சம்பவங்கள் சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டன. நல்ல வேளையாக இப்போது கென்யா, உகண்டா, தங்கனீகா ஆகிய நாடுகளில் பிரிட்டிஷ் துருப்பினர் ராணுவக் கலகங்களை வெற்றியுடன் அடக்கிவிட்டார்கள்.

மேலே குறிப்பிட்ட 3 நாடுகளும் தொடர்ச்சியான எல்லைகளைக்கொண்ட அண்டை நாடுகள். இவைகளை ஒன்று சேர்த்து ஒரு பெடரேஷன் அமைக்க வேண்டுமென்ற யோசனை பல காலமாக ஆபிரிக்கத் தலைவர்களால் வெளியிடப்பட்டது.

இது எவ்வளவு அவசியமும், அவசரமும் என்பதை கிழக்காபிரிக்க சம்பவங்கள் இப்போது நன்கு உணர்த்திவிட்டன. பலம் பொருந்திய ஒரு பெடரேஷனின் கீழ் பலமான ராணுவம் அங்கு வைக்கப்பட வேண்டிய அவசியத்தையும் அவை வற்புறுத்துகின்றன.

★

## அமெரிக்காவின் பங்கு

இப்போது விஷயம் "பெரிய இடத்தில்" ஆலோசிக்கப்படுகிறது. ஆமாம், வாஷிங்டனில்! மத்திய கிழக்கு நிலைமை, கிழக்காபிரிக்க நிலைமை குறித்து பிரிட்டன் அமெரிக்காவுடன் ஆலோசனை கலந்திருக்கிறது.

அமெரிக்காவின் நடவடிக்கை சமீப காலத்தில் பலவிடங்களில் விஸ்தரிக்கப்படுவருவதை உணரலாம். இதற்குபிரிட்டனே மறைமுகக் காரணமாகவும் இருக்கிறது என்பதை அவதானிகள் உணரலாம்.

மலேஷியா சம்பந்தமாக பிரிட்டன் யுத்தத்திலீடுபட்டால் அமெரிக்கா என்ன செய்யும் என்று திரு. பட்லர் லண்டனில் வைத்து கென்னடியிடம் கேட்டிருக்கிறார். இது பற்றி அவர் நேரடியாகப் பதிலளிக்காவிடினும் அமெரிக்கா இதுபற்றியோசித்துவரும் நிலையை ஒருவிதமாக உணர்த்தியிருக்கிறார். திரு. கென்னடி இந்தோனேஷிய அதிபரிடமும் இந்த விஷயமாகக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. மலேஷியத் தகராறு பெரிதானால், அதில் அமெரிக்காவும் சம்பந்தப்படவேண்டியிருக்கும் என்பதை அவர் சுகர்ணோவிடம் கூறியிருக்கிறார்.

இப்போது சைப்ரஸுக்கு அமெரிக்கத்துருப்புகளை அனுப்புவது பற்றி பிரிட்டன் கேட்டிருக்கிறது. அதோடு பிரான்ஸ் சீனவை அங்கீகரித்ததைத் தொடர்ந்து போர்மோஸாவில் அமெரிக்காவின் ராணுவ பலம் மேலும் அதிகரிக்கப்படும் சாத்தியமும் உண்டு.

அமெரிக்க 7-ம் கடற்படை இந்துசமுத்திரத்தின் சர்வதேசக் கடற்பிராந்தியத்தில் ரோந்து சுற்றவிருப்பதை எதிர்த்தவர்கள், கிழக்காபிரிக்காவிலும், போர்மோஸாவிலும், சைப்ரஸிலும், மலேஷியாவிலும் மறைமுகமாக அல்லது நேரடியாக அமெரிக்காவின் அரசியல் அல்லது ராணுவ நடவடிக்கை பரவவிருப்பது பற்றி என்ன சொல்வார்களோ? போர்மோஸாவைத்தவிர, மேற்கண்ட பொறுப்புக்கள் அனைத்தும் பிரிட்டனுடையவை. இப்போது இந்தப் பாரத்தைத்தன்னுடன் பகிர்ந்து கொள்ளும்படி அது அமெரிக்காவை அழைக்கிறது. இதுதான் நிலைமை.

★

## கம்யூனிஸ்ட் திறமை

அதேசமயம் பணம், பிரசாரம், ராணுவம், சதி ஆகிய எத்தனை கோட்டைகளுக்கு மத்தியிலும் ஊடுருவும் சதி தங்களுக்குண்டு என்பதை கம்யூனிஸ்ட் நாடுகள் உணர்த்திவருவது நினைக்க நினைக்க அதிசயமாய் இருக்கிறது.

கிழக்காபிரிக்காவில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி அங்குள்ள பிரிட்டிஷ் உளவாளிகள் ஏற்கனவே தெரிந்து கொள்ளாமலிருந்தது இன்னும் அதிசயமான விஷயம். அவர்களின் கண்ணை மறைத்து, சம்பவங்களை உருவாக்கியவர்கள் மேலும் அதிசயத்தை விளைவித்துவிட்டார்கள்.

★

## காஷ்மீர்

நாளை இரவு ஐ. நா. பாதுகாப்புசபை கூடி காஷ்மீர்பற்றி விவாதிக்கவிருக்கிறது. காஷ்மீர் சம்பந்தமாக பாதுகாப்பு சபை இதுவரை 109 தடவைகள் கூடியிருக்கிறது. நாளை கூடவிருப்பது சபையின் 110-வது கூட்டமாகும். இத்தனை கூட்டம் நடந்தபின்பும் கூட காஷ்மீர் பிரச்னை எருமை மாட்டைப்போல் ஒரு அங்குலம் கூட நகராமல் இருக்கிறது. அங்கு போர் நிறுத்தம் ஏற்பட்டபோது இந்தியாவின் கையில் மூன்றில் இருபகுதியும், பாகிஸ்தானின் கையில் மிகுதி ஒருபகுதியும் சிக்கியிருந்தது. போர் நடைபெற்றபோது மட்டுமே பிரச்னை நகர்ந்து கொண்டிருந்தது. யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து தீராவியாதியாக அப்படியே அது உட்கார்ந்துவிட்டது. ஆரம்பத்தில் காஷ்மீர் வல்லரசுக் கெடுபிடிக்குள் சிக்கியிருந்தது. அது இந்தியாவின் பிரிக்கமுடியாதபகுதிஎன ரஷ்யா பகிரங்கமாக அறிவித்தது. ஆனால் மேற்குவல்லரசுகளோ பகிரங்கமாக எதுவும் கூறாவிடினும் ஐ. நா. வில் பாகிஸ்தானையே பொதுவாக ஆதரித்தன. நாளாவட்டத்தில் மேற்குநாடுகள் ஐ. நா. வில் கடைப்பிடித்த கொள்கை பாகிஸ்தானை ஆதரிப்பதுபோல இல்லாவிடினும், இந்தியாவுக்கு எரிச்சலை மூட்டுவதாக இருந்தன. சர்வதேசநிலைமை வேகமாக மாறிவருவதால் காஷ்மீர் விஷயமாக அமெரிக்கா பிரிட்டன் போன்ற நாடுகள் இப்போது எவ்வித கொள்கையைக் கடைப்பிடிக்கும் என்பது 110-வது கூட்டமுடிவில் தெரியும்.

இந்தியா, பாகிஸ்தான் இரு கட்சிகளில், சட்டரீதியாக காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்திருக்கிறதென்பதற்கு அதிகமேற்கோள்கள் காட்டப்படுகின்றன.

காஷ்மீரில் இப்போது அமைதி கெட்டுவிட்டிருக்கிறது. அங்கு மூன்று சக்திகள் இப்போது வேலைசெய்துவருகின்றன. பாகிஸ்தானுக்கு ஆதரவான சக்திகளும், முன்னாள் பிரதமர் ஷேக்அப்துல்லாவுக்கு ஆதரவானசக்திகளும், தேசிய மகாநாட்டுத்தலைவரும், 2-வது காஷ்மீர் பிரதமருமான பக்ஷி குலாம் முகம்மதுவுக்கு ஆதரவான சக்திகளும் அங்கு தலை காட்டுகின்றன.

பாகிஸ்தான் கோரும் சர்வஜன வாக்குரிமை அங்கு நடத்தினால், காஷ்மீரில் இந்தியா தோற்றுவிடும் என்றும் சில வட்டாரங்கள் கருதுகின்றன. அங்கு அமைதி குன்றியிருப்பதே இதற்குக்காரணம். முகம்மது நபியின் புனிதகேசம்திருட்டுப் போனதில் பக்ஷிகுலாம் முகம்மதுவும், அவரது குடும்பத்தினரும் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சிலர் சந்தேகிக்கின்றனர்.

மீண்டும் அவர் பதவிவகிக்க அழைக்கப்படவேண்டும் என்ற காரணத்திற்காகவே இவ்விதச் செயல் நடைபெற்றிருப்பதாயும் கூறப்படுகிறது. ஆனால் இந்திய உள்விவகார அதிகாரிகள் இதை மறுத்துள்ளனர். சிற்க;

மீட்கப்பட்ட புனிதச்சின்னம் உண்மையானதல்ல என காஷ்மீரில் வதந்திகள் பரப்பப்பட்டுவருகின்றன. ஆனால் வருகிற 5-ம் திகதி பொதுமக்கள் பார்வைக்காக அதை வைப்பதென இந்திய அதிகாரிகள் முடிவு செய்திருப்பதால், நிலைமையில் அபிவிருத்தி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் பாதுகாப்புச்சபையில் இந்திய–பாகிஸ்தான் வகுப்புக்கலவரங்கள் கட்டாயம் இடம்பெறும். காஷ்மீர்பிரச்னை இதனுடன் சம்பந்தப்பட்டிருப்பதே இதற்குக்காரணம்.

வகுப்புவாதப்பிரசாரம் அங்கு நடைபெறும் அதேவேளையில் ஸ்ரீநகரில் புனிதச்சின்னத்தைப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க இந்தியா ஏற்பாடு செய்திருப்பதும், முஸ்லிம்கள் இந்தியாவில் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதைப் பொய்ப்பிக்கச்செய்ய, ஒரு முஸ்லிம் மந்திரியான சகளாவை இந்தியா அனுப்பியிருப்பதும் பாகிஸ்தான் குற்றச்சாட்டுகளுக்கு வெடிவைக்கும் முயற்சியேயாகும். எதுவாயினும்பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கெதிராக எந்தத் தீர்மானமும் நிறைவேறாது என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவுக்குப் பிடிக்காத தீர்மானத்தை "வீட்டோ" மூலம் வெடிவைக்க ரஷ்யா காத்திருப்பதே இதற்குக் காரணம்.

எனவே பாதுகாப்புசபை இப்பேதைய நிலையில் ஒரு பிரசாரமேடையாகவே பாகிஸ்தானுக்கு உபயோகமாகும். ஆனால் காஷ்மீர் பிரச்னையோ, பழையபடி. எருமையைப் போலவே நகராமல் உட்கார்ந்திருக்கும்.

# நோபல் பரிசுபெற்ற இரு ஜெர்மன் விஞ்ஞானிகள்

இவ்வருடம் 'நோபல்' பரிசு பெற்றவர்களில் இருவர் ஜெர்மானியர். பேராசிரியர் ஜே. ஹான்ஸ் –டி– ஜென்ஸன் என்ற விஞ்ஞானி பௌதிகத்திற்கான பரிசையும், பேராசிரியர் கார்ல் ஸிலர் ரசாயனத்திற்கான பரிசையும் பெற்றுள்ளனர். இந்த ரசாயனத்துறைப் பரிசைக் கூட்டாகப் பெற்றவர் இத்தாலிய தேசத்தைச் சேர்ந்த கிலியோ நாட்டா.

அணுசக்தி பௌதிகத்துறையில் சென்ற முப்பது வருடங்களாக நடைபெற்று வந்த ஆராய்ச்சிகளில் நுணுக்கஅணுவப்பொருள்கள்பற்றி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது. 1935-ல் ஜென்ஸனும் அவருடைய சகா ஜோப்பர்ட் மேயரும் அணுசக்தி ஓட்டின் உருவ அமைப்பு என்பது பற்றி தங்கள் ஆராய்ச்சிகளைத் தொகுத்து நியூயார்க்கில் வெளியிட்டனர். இவர்களின் இந்த ஆராய்ச்சிகளைப் பாராட்டியே இவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். 56 வயதுள்ள ஜென்ஸன் ஹீடல்பர்க் பல்கலைக்கழகத்தில் பௌதிக சாஸ்திரப் பேராசிரியராக இருந்து வருகிறார். இவர் ஹாம்பார்க்கில் பிறந்து ஹாம்பர்க் பல்கலைக் கழகத்தில் படித்துத் தேர்ந்தவர் 1964ல் ஹனேவர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினர். இப்போது நோபல் பரிசு எந்த ஆராய்ச்சிக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த ஆராய்ச்சியை இவர் ஆரம்பித்தது ஹனேவரில்தான், 1948-ல் ஹாம்பர்க் பல்கலைக் கழகத்தின் கௌரவப் பேராசிரியராக இவர் பணிபுரிந்தார். இதற்கு ஒருவருடம் கழித்து இவர் ஹீடல்பெர்க் வந்து சேர்ந்தார். ஹீடல்பெர்க் விஞ்ஞானக் கழகத்தில் இவர் ஒரு அங்கத்தினர். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலிருந்து வந்த 'விருந்தினர்' பேராசிரியர் பதவியை இவர் பல தடவை ஏற்றிருக்கிறார்.

பிளாஸ்டிக் பொருள், நைலான்நூல் தயாரிப்புகளுக்கு உதவும் ரசாயன முறையைக்

(10-ம் பக்கம் பார்க்க)

## ஆசையின் அலைவு

— திமிலை மகாலிங்கம் —

ஆசையில் அலைந்தேன் அலைந்தேன் நான் — ஒரு
அன்பினில் நகர்ந்தேன் தொடர்ந்தேன் நான்
கோபமும் ரோசமும் துறந்தேன் நான் — அவள்
துன்பமும் இன்பமும் பகிர்ந்தேன் நான்

மேதினி தாரகை முழுமதியும் — அவள்
மெல்லிடை நடையினில் புவிமுழுதும்
ஏதென மருண்டதில் எனைமறந்தேன் — வரும்
இன்பமும் துன்பமும் சமமென்றேன்.

பாட்டினைப் பாடிய பொழுதினிலே — தலை
பட்டிடும் பாட்டினில் மதிமயங்கி
ஏட்டினை மறந்தேன் செயல் மறந்தேன் — மன
ஏக்கமதால் எனை நான் மறந்தேன்.

நித்திய ஜோதியை நிகரெனவே — அவள்
நேர்த்தியில மனம் நிலைத்திடவே
புத்திகள் கலங்கின எனையறியா — நிலை
புண்ணியந் தானென நான் நினைத்தேன்.

காட்டினில் வெண்மதி பயனுறுமோ — உளக்
கனவினில் கனிதான் கனிந்திடுமோ?
ஏட்டினில் சுரைக்காய் சுவைத்திடுமோ — இவை
என்மனக் கேள்விகள் யாரறிவார்?

# தொடர் யாத்திரிகன் கதை

"நீலாம்பரி"

"சிற்றம்பலம் மாப்பிள்ளை மாதிரி ஷோக்காயிருக்கிறன். வயசும் அவனுக்கு கல்யாண வயசாகிறது" என்று நீங்கள் கூடத்தான் முன்பு சொன்னீர்களே சுவாமியார். சிற்றம்பலம் விரும்புகிறதாயிருந்தால் அவரது மன எண்ணப்படி செய்து கொள்ள வேண்டியதுதானே. அவருக்கும் வாழ்க்கைக்கு ஒரு துணை அவசியம் வேண்டியதுதான். நாலுபேர் மதிக்கும் ஆணாயிலே ... காலாகாலத்தில் —"

நான் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்போதேசுவாமியார் எழுந்து கை, வாய்அலம்பிவர ஆற்றங்கரையை நாடினர். நாங்களும் அநேகமாய் சாப்பிட்டு முடிந்திருந்ததினுல் ஒவ்வொருவராக எழுந்துபோய் இலைகளை வீசிவிட்டு ஆற்றில் கை அலம்பிக்கொண்டு திரும்பினோம் சுவாமியார், இன்னமும் பானையில் எஞ்சியிருந்த கொஞ்சம் பொங்கலை வாழை இலையில் சுற்றி வைத்துவிட்டு திரும்பவும் ஆற்றுக்குப்போய் பொங்கல் பானை, எங்கேயோ ஒரு கடைக்காரனிடம் போய் இரவல் வாங்கிவந்த தேங்காய்த்துருவல்கு ஆகியபொருட்களைக் கழுவிச் சுத்தப்படுத்திக்கொண்டு வந்தார். அப்பொழுது அவர் வாய்,

முன்னம் அவனுடைய
நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும்
வண்ணம் கேட்டாள்
பின்னம் அவனுடைய
ஆரூர் கேட்டாள்
பேர்த்தும் அவனுக்கே
பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும்
அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார்
ஆசாரத்தை
தன்னை மறந்தாள்
தன்னுமம் கெட்டாள்
தலைப்பட்டாள்
நங்கை தலைவன் தாளே

என்றபாடலைப் பாடிக்கொண்டிருந்தது. இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டே நமக்கெதிரே ஒரு கற்பாறை மீது அமர்ந்த சுவாமியார் தமது வெற்றிலைப் பையை அவிழ்த்து வைத்துக்கொண்டு "சிவக்கொழுந்து என்ன சொல்லுருய், சிற்றம்பலம் வயதுவந்த ஆண்பிள்ளையாயிருக்கிறபடியால் அவன் விருப்பப்படி சொந்தவசதிப்படி ஒரு கல்யாணத்தைச் செய்து கொள்ளலாம் தானே என்கிறாய் அதுதானே உன் யோசனை?" என்றார் என்னை நோக்கி.

இவ்வேளை பார்த்து தேங்காய் துருவலை இரவல் கொடுத்த கடைக்காரர் ஒரு பொடியனை அதைவாங்கிவரும்படி அனுப்பியிருந்தார். அவன் சிங்களபொடியன் அறவே ஒருவார்த்தை தமிழ்பேசமாட்டான். எங்கள் முன்னால் வந்து நின்று தேங்காய் துருவும் பாவனையாகக் கையை வளைத்துக் காட்டிக்கொண்டு சுவாமியாரிடம் ஏதோ சிங்களத்தில் சொன்னான். சுவாமியார் உடனே எழுந்து துருவலகுடன் வாழை இலையில கட்டி வைத்த சர்க்கரைபொங்கலையும் அவனுக்குத் தந்தார். அவன் முகம் மலர ஒரு சிரிப்பினால் துதிசெலுத்திவிட்டு துருவலையும் பொங்கலையும் இரண்டு கையாலும் வாங்கிக் கொண்டே அங்கிருந்து சென்றான். அவன் போன பிற்பாடு "உங்களில் ஆருக்கு சிங்களம் பேசத் தெரியும்" என்று கேட்டார். 'யாருக்குமே தெரியாது' என்று சொல்லி விட்டோம்.

"நீ சிங்களம் பேசப்பழகவில்லையோ!" என்றுசுவாமியார் வேலாயுதத்திடம் வினவிய போது "இல்லை, பாட்டா. அதற்கு சந்தர்ப்பமும் தேவையும் ஏற்படவில்லை" என்றான் வேலாயுதம்.

"சிங்களம் பேசத் தெரிந்திருந்தால் இப்ப அந்த சிங்களப் பொடியனைக்கண்ட மாத்திரத்தே நான் துருவலகுபிடியைக் கையில் தூக்க, நீங்கள் என்னவோ ஏதோ என்று விழிக்கவும் உங்கள் தமிழ் இன உணர்ச்சி கொதிப்படையவும் பிறகு அதைத் தொட்டு வில்லங்கப் படவும் இடம் வராது" என்று கூறி மெல்லச் சிரித்துவிட்டு, சிற்றம்பலத்தைநோக்கி "நீ என்னடா மகன் விசர்ப் பொடியனயிருக்கிறாய். இந்தக் காரியத்தில் மனதை அதிகம் இழந்துவிட்டாய் போலிருக்கிறது. உலகத்திலே மனிதனாய்ப் பிறந்தவனுக்கு மாதா, பிதா, குரு, தெய்வம், வீடு, உறவு, சுற்றம் என்று எவ்வளவு கடமைகாரியங்களிருக்கின்றன. நீயோ கொழும்பிலே மாண்டு விடப்போகிறேன் என்று நிற்கிறாயே. என்னவோ நீயாக யோசித்துப்பார். ஒவ்வொரு வரும் முதலில் தனக்குத்தானே எசமான் ஆகவேண்டும். தன்னை வென்றவன் தான் பிறரை ஆளமுடியும்."

"சிற்றம்பலத்துக்கு கொழும்பிலே சொந்தமாக ஒரு வீடும், பன்னிரண்டாயிரத்துக்குப் பெறுமதியான காரும் ரொக்கமாக பத்தாயிரம்ரூபா பணமும் கொடுக்கச் சம்மதித்திருக்கிறார் சன் பாட்டா" என்றான் வேலாயுதம்.

"எட, உனக்கும் இந்த சங்கதிகள் விளங்குதோ? நானைக்கும் நீயும் இப்படித்தான் நிற்பியோ? நீங்களெல்லாம்பிறந்து வளர்ந்தவர் இன்னமும் கடலில் மூழ்கிப் போய்விடவில்லை மக்கள். உங்கள் அப்பு ஆச்சி செத்தொழிஞ்சு போய்விடவில்லை. உங்கள் விருப்பம் முதலில் அவர்கள் விருப்பமாக வேண்டும். உங்களுக்கு மனையாளாக வரப்போகிறவள் முதலில் உங்கள் அப்புவுக்கும் ஆச்சிக்கும் மருமகளாகவேண்டும். பொன்னும் பொருளுமாக கனகாபிஷேகம் செய்தாலும் ஒவ்வொருவனும் தனக்குத் தனக்கென்றுள்ள சொந்தநிலையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்" என்று பொதுப் படையாகப் பேசினர் சுவாமியார்.

* * *

ஆற்றங்கரையில் அமர்ந்து வெகுநேரமாகப் பேசினோம். அநேகமாகப் பொழுதுசாயும் வேளையாகிவிட்டது. சிற்றம்பலம் மனம்திறந்து எல்லாம் சொல்லியதுடன் அந்தப் பெண்ணையல்லாமல் தான் இன்னொருத்தியைக்கல்யாணம் செய்துகொள்வது என்பது இந்த ஜன்மத்தில் நடக்காது என்றும் சுவாமியாரே இது விஷயத்தில் தலையிட்டு தன் விதியை நிர்ணயிக்க வேண்டுமென்றும் கூறி தன்னை சுவாமியாரிடமே ஒப்படைத்துவிட்டதாக மொழிந்தான்.

"பெண்ணின் தகப்பனார், தம் பெண்ணுக்கு மாப்பிள்ளையாக வருபவனை தன் மருமகனாக உரிமையாக்கிக்கொண்டு தன் குடும்பத்தில் அவனைப் பிணைத்துக்கொள்வதில் கண்ணுங் கருத்துமாய் இருப்பவர். அதனால்தான் அவரை வசப்படுத்துவதென்பது இலகுவாயில்லை" என்ற உண்மையையும் தெரிவித்தான்.

"அந்தப் பொடிச்சியுடன் நீ எந்த மட்டில் பழகியிருக்கிறாய். ஆள் குணம் நடை எல்லாம் எப்படி?" என்று கேட்டதற்கு "அவள் என் முன்னால் தானே தினமும் இருக்கிறாள், பாட்டா. அவளை நான் நன்றாக அறிந்திருக்கிறேன்" என்றான்.

"உனது பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமான பெண் என்று உனக்கு நிச்சய திருப்தி என்றால் சரிதான் அவள் உன் வழி எதற்கும் வருவாள். இல்லையா?" என்றார் சுவாமியார்.

"அதில் எனக்கு இம்மியும் சந்தேகம் கிடையாது. எனக்கும் ஒரு சகோதரி இருக்கிறாள் பாட்டா. உலகமெங்கிலும் பெண்கள் ஒரே மாதிரியானவர்களாய் இருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது" என்று சிற்றம்பலம் கூறினன்.

"சரி அப்படியானல் இனி நான்உன் காரியத்தில் தலையிடலாம். அது, நீ வேலாயுதத்தின் தோழனாக இருப்பதினால் என்று தெரிந்துகொள். அவனுக்கு இப்படி ஒரு சங்கடம் நேர்ந்துவிட்டால் நான் எவ்வளவு சிரத்தை எடுப்பேனோ அந்தளவுக்கு உன் விஷயத்தையும் கருதி கதிரமலை முருகன் திருவருள் முன்னிற்க, தலைப் போடுகிறேன். நீ நான் சொன்னபடி செய்யவேண்டும். செய்வாய் தானே?"

"செய்கிறேன் பாட்டா. கண்ணைமூடிக்கொண்டு உங்களைப் பின்பற்றுகிறேன்" என்றான் சிற்றம்பலம்.

(தொடரும்)

---

# சிறுவர் பூங்கா



சமய உணர்ச்சி இந்தியாவில் அறவே ஒழிந்து விடாமல் இருக்கவேண்டுமாயின், இந்திய இளைஞர்களுக்கு உலகியல் சம்பந்தமான கல்வி அளிப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு சமயசம்பந்தமான கல்வி அளிப்பதும் அவசியமாகும்.

★

பைபிளிலும், குரானிலும் நான் கடவுளை காண்கிறேனே, அதே கடவுளை, பகவத்கீதையிலும் காண்கிறேன். எனவே, பகவத்கீதையிலிருந்து சிறந்த ஒரு மன எழுச்சியை -ஒப்பற்ற ஒரு ஞானத்தை - ஹிந்து மாணவர்கள் அடைய முடியுமென்று சொல்ல விரும்புகிறேன். ஏனெனில்,மற்றெந்தநூலையும் விட, கீதையே அவர்களது மனப்பண்புக்கு ஏற்றதொரு நூலாக இருக்கும்.

★

கீதையே அகிலத்துக்கும் அன்னை. எவரையும் அவள் புறக்கணிப்பதில்லை. அவளது வீட்டு வாயில் திறந்தேகிடக்கும். விரும்புவோர் யாரும் தாராளமாக உள்ளே போகலாம். கீதையில்

## ஊக்கம்

— க சீவகாருண்யம் —

ஓர் ஊரில் இரு சகோதரர்கள் இருந்தனர். இவர்களில் மூத்தவன் நன்றாகப் படிக்கக் கூடியவன். சாடசாலையிலும் கூட அவன் முதலாவது பிள்ளையாக வரத்தவறுவதில்லை. ஆனல் இளையவனே வெறும் மக்கு. வீட்டில் இளையவனுக்கே பேச்சு அதிகம். பாடசாலையிலும் மற்றவர்களால் ஒதுக்கப்பட்டிருந்தான். இளையவன் வீட்டில் படிப்பதும் இல்லை. காலை எட்டு மணிக்குப் பாடசாலைக்குப் புறப்பட்டால் பின்னர் மாலை ஆறு மணிக்குத் தான் அவனை வீட்டில் காணலாம்.

நாட்கள் உருண்டோடின. அதையடுத்து கிழமைகளும், மாதங்களும் சென்றன. இறுதியில் ஒரு வருடமும் முடிந்தது. ஆனல் இளையவன் வகுப்பில் 'பெயில்' ஆகிவிட்டான். மூத்தவன் 'பாஸ்' பண்ணிவிட்டான்.

அடுத்த வருடம் ஆரம்பமாகியது. இளையவன் ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தான். அதைப் போல மூத்தவனும் வழமையாகப்பாடசாலைகுச் சென்று கொண்டிருந்தான்.

ஒரு நாள் இவ்விரு சகோதரர்கள் வீட்டில் ஒரு ஜோஸ்யன்வந்தான். வந்தவன் மூத்தவனின் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு "நீ பயப்படாதே. நீ இந்த வருஷம் கட்டாயம் வகுப்பில் சித்தியடைவாய்" என்று சொல்லிவிட்டு இளையவனின் கையைப்பார்த்தான். பார்த்தவன் உடனே இளையவனின் கையை உதறிவிட்டு "நீ படிக்கமாட்டாய்" என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டான். மூத்தவனுக்கு அன்று தொட்டு ஒரே ஆனந்தம். ஆனல் இளையவனே பிடிவாதமாகப் படிப்பிலே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

நாட்கள் உருண்டன. அதையடுத்து பாதங்கள் உருண்டன. அடுத்த ஒருவருடமும் முடிவடைந்தது. இளையவன் வகுப்பில் ஒரே அமைதி. பாடசாலை முடிந்ததும் இளையவனும் மூத்தவனும் வீடு திரும்புகின்றனர். வீடு திரும்பிய இளையவன் உடனே தனது அப்பாவிடம் "அப்பா நான் பாஸாகிவிட்டேனப்பா. அண்ணன் பெயில்"என்றான். அதைகேட்ட அவனது அப்பா ஊக்கம் இருந்தால் எந்தப் பெரிய காரியத்தையும் சாதிக்க முடியும் மகனே" என்றவர், மூத்தமகனைத்தேற்றினர். அவன கண்ணீர் வடித்த முகத்துடன் நின்றான். எனினும் அவன் உள்ளத்தில் புதிய ஊக்கம் பிறந்திருப்பது, முகத்திலே அப்படியே தெரிந்தது.

---

உண்மையான பக்தியுடையவர் எவருக்கும் ஏமாற்றம் என்பதே இன்னதென்று தெரியாது. அறிவின் எல்லையைக் கடந்துள்ள நிரந்தரமான ஓர் ஆனந்தத்தையும் சாந்தியையும் அவர்கள் எப்பொழுதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(கடந்த 30-1-64வியாழக்கிழமை காந்திஜிசிராத்த தினம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.)

---

ஒரு மனிதனுக்கு யாரிடத்தும் பணிவும் இன்சொல்லும் உடையவனுயிருத்தலே அழகு செய்யும் ஆபரணமாம். பொன்னாலும் மணியாலும் அழகு செய்துகொள்ளும் அணிகள், உண்மையில் அணிகளாகா.

— திருவள்ளுவர்

---

## காந்தித் தாத்தா!

காவலூர்

— எஸ். ஏ. யோகராஜா —

அகிம்சையோடு
வாழ்ந்து இந்த
அகிலம் காத்த தாத்தா
சுகத்தை இழந்து
உலகுக்காகத்
தொண்டு செய்த
தாத்தா

★

தஞ்சம் என்று
வந்தவரை
தாங்கிக் காத்த தாத்தா
பஞ்சம் என்று
பதறினோரைப்
பரிந் தணைத்த தாத்தா

★

வறுமை நீக்க
மக்கள் வாழ
வழி வகுத்த தாத்தா
பொறுமையோடு
கடமை செய்து
புன்மை தீர்த்த தாத்தா

★

பகையை வென்று
மக்களுக்கு
பரிவு ஈந்த தாத்தா
தகைமையான
செயலினுலே
தரணி காத்த தாத்தா

★

அன்பு வழி
நின்று என்றும்
ஆக்கஞ் செய்த தாத்தா
என்பினையும்
மற்றவர்க்கு
ஈயும் உளத் தாத்தா

★

சாதிவெறி சமயவெறி
சாடி நின்ற தாத்தா
நீதியோடு மக்களுக்காய்
நெஞ்சளித்த தாத்தா!

---

தொடர் அம்சம்

## வள்ளுவர் காட்டும் வழி

எழுதுபவர்:

— கு. ராதாரமணன் —

எதிர்பாருங்கள்

---

## சுவையான செய்தி

—கே. கணபதிப்பிள்ளை—

(தென்புலோலியூர்)

அமெரிக்காவில் பிஷ்ஹுக் என்றநகரில் வசிக்கும் 27 வயதுள்ள "ராபர்ட் எர்ல் ஹுஸ்" என்பவரே இன்றும் உலகத்தில் மிகவும் கனமான மனிதர். அவர் உயரம் 6 அடி கனம் 946 இருத்தல். பிறந்த பொழுது அவரின் கனம் 11 இருத்தல். 10 வயதில் 378 இருத்தல். அவரின் உடம்பின் சுற்றளவு 109 அங்குலம். அதாவது 9 அடி 1 அங்குலம்.

●

புத்தகங்கள் அதிகமாக அச்சடிக்கும் நாடு உலகிலேயே இங்கிலாந்துதான். 1955-ம் ஆண்டு 19, 962 தலைப்புகளுடன் அச்சடிக்கப்பட்டது. இதில் 14,192 புது தலைப்புகளுடனும், 5,770 மறுபதிப்புகளுடனும் வெளியிடப்பட்டது.

●

ஸ்திரிகளில் அதிக வயது வாழ்ந்தவர் அயர்லாந்தைச் சேர்ந்த "காதரின்ப்ளஸ் கெட்" என்பவா. 1820-ம் வருடம் நவம்பர் 22-ம் தேதி பிறந்து 111 வருடம் 10 மாசம் 28 நாள் வாழ்ந்து 1932-ம் வருடம் அக்டேபர் 14-ம் தேதி இறந்தார்.

●

அமெரிக்க காங்கிரஸ் காரியாலயத்தில் உள்ள புத்தகசாலைதான் உலகிலேயே மிகப்பெரிய புத்தகசாலை. இதில் 33,152,852 வகையான புத்தகங்கள் இருக்கின்றன இதில் 101, 55, 307 வல்யூம்களும், துண்டுப்பிரசுரங்களும், 14 28, 594 கையெழுத்துப் பிரதிகளும் 2, 002,277 சங்கீத சம்பந்தமான வால்யூம்களும், 4,38,881 கிராமபோன் ரிகார்டுகளும் உள்ளன.

அமெரிக்க சிறுகதை

# யவன கல்பம்

டாக்டர் ஹெடீச்சர் தன் அறையின் ஒரு பெரிய மேசையின் முன்புறம் நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரின் முன்பாக மேசையைச் சுற்றியுள்ள ஆசனங்களில் மற்றும் நால்வர் இருந்தனர். நால்வரும் வயோதிபர்கள். ஒருவர், பெண்; விதவை. மற்றைய வயோதிபர் மூவருள் ஒருவன் ஒரு வியாபாரி. ஒருவன் ஒரு காலத்தில் அதாவது தனது இளமைப் பருவத்தில், புகழ் பெற்ற ஓர் அரசியல்வாதியாக இருந்தான். மற்றவனோ பட்டாளத்திலிருந்து இளைப்பாறிய ஒருவர்.

அந்த அறையின் சுவர்களின் பக்கத்தில் பலவித புத்தகங்கள் வைத்திருக்கும் அலுமாரிகள் இருந்தன. இவற்றுள் இரு அலுமாரிகளுக்கிடையே ஒரு சின்ன அலுமாரி இருந்தது. அதன் கதவு சற்று திறந்தபடியிருந்தது. அதனூடாக ஓர் எலும்புக்கூடு வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. அதன்மேல் மந்திரசக்தியுள்ள ஒரு நிலைக்கண்ணாடி காணப்பெற்றது. அதைப்பற்றி ஆச்சரியமான பல கதைகள் உள்ளன. ஹெடீச்சரிடம் வைத்தியம் செய்து இறந்தவர்களின் ஆவி அக்கண்ணாடியுள் இருப்பதாகக் கூறப்பட்டது.

மூலம்:
நெதானியல் கவுதோனி

இதற்கு எதிரே ஒரு ஆளுயர மங்கையின் பெரியபடமொன்று சுவரில் தொங்கவிடப்பட்டிருந்தது. ஐம்பது வருடங்களுக்கு முன்பு ஹெடீச்சரை விவாகம் செய்ய இந்த மங்கை ஒப்பந்தமாகியிருந்தாள். ஆனால் ஒரு சிறு சுகவீனம் காரணமாகத் தனது காதலனின் மாத்திரைகளை விழுங்கி உயிரைவிட்டாள்.

அறையின் இன்னொரு பக்கமாக, ஒரு பலகையில் கறுப்பு அட்டையிட்டு சரிகை வேலையினால் அலங்கரிக்கப்பட்டபெரிய புத்தகம் ஒன்றிருந்தது. அது ஒரு மாந்ரீகப் புத்தகம். ஒரு சமயம் ஒருவர் அப்புத்தகத்தை எடுத்துப் பார்க்க விரும்பி, அதன் முதல் பக்கத்தைத் திறந்த மாத்திரத்தே எலும்புக்கூடு தன் அலுமாரியினுள்ளிருந்து தள்ளிக் குதித்தது. படத்தில் இருந்த மங்கை ஓர் அடி முன்னுக்கு நகர்ந்துவந்தாள். நிலைக் கண்ணாடியில் பிசாசுகளின் முகங்கள் எட்டிப் பார்ப்பது தெரிந்தது. "தொடாதே" என்று சத்தம் எழுந்தது.

* * *

இப்படியாகப்பட்ட மாய அறையில் நண்பர்கள் சந்தித்த நேரம் மாலைக்காலம் சூரியனின் ஒளி சாளரத்திற்கூடாக மேசையில் வந்து படிந்திருந்தது "நண்பர்களே, நம் ஒரு புதுவித ஆராய்ச்சிக்காக இங்கு கூடியிருக்கிறோம்" என்றார் ஹெடீச்சர். அவர்குரல் தெளிவாக ஒலித்தது "ஆராய்ச்சி புதுமையானது மாத்திரமல்ல, பயங்கரம் நிறைந்ததும்கூட" என்று டாக்டர் தொடர்ந்து கூறினர். நண்பர்கள் ஆச்சரியத்துடன் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். டாக்டர் எழுந்து சென்று அந்தக் கறுப்பு அட்டைப்புத்தகத்தை எடுத்துக்கொண்டுவந்தார் அதன் இருண்ட பக்கங்களிலிருந்த ஒரு ரோசா மலரை எடுத்தார். அது ஒரு காலத்தில் புதுமலராக இருந்தது. இன்று அதன் இதழ்கள் அடியில் உள்ள பச்சைநிறம் வெளுத்து அனைத்தும் சருகாக உதிர்ந்து போய்விடும் நிலையில் இருந்தது.

ஹெடீச்சர் பேசத் தொடங்கினர். "இந்த ரோசா மலரானது சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னே அன்றலர்ந்த புஷ்பமாக முழுச்சோபையுடன் ஒளி வீசியது. என்காதலியாள் எனக்கு இதனை சன்மானம் அளித்திருந்தாள். அரை நூற்றாண்டுக்குப் பிற்பாடு இந்த மலர் மீண்டும் அன்றலர்ந்த மலராகி ஒளிவீசுமா?"

"அது எப்படி சாத்தியமாகும், வீண் பேச்சு" என்றாள் விதவை. அவள் அங்கும் இங்குமாக திரும்பிப் பார்த்து தலையை அசைத்துக் கொண்டே பேசினாள். "ஒரு வயோதிப மாதின் வதனத்தில் திரும்பவும் இளமையின் ஒளி வீசுமா?" என்று அவள் மேலும் கேட்டாள்.

"அந்த அதிசயத்தை நீங்களே பாருங்கள்" என்று கூறிவிட்டு டாக்டர் தன் முன்னே உள்ள கிண்ணத்தில் உள்ள நீரில் அந்த வாடிய மலரை எறிந்தார். ஆரம்பத்தில் அது நீரில் மிதந்தது. பின் சற்று வேளைக்குள்ளாக நீரில் ஊறி ஈரமாகியது. இதழ்கள் சற்று அசைவதாகத் தோற்றின. வெளுத்த இதழ்கள் கருஞ்சிவப்பு நிறத்தைப் பெற்றன. மலரின் அடியில் உள்ள தளிர் அதன் பழைய பசுமை நிறத்தைப்பெற்றது. அன்றுதான் அலர்ந்த புதுமலர் போல அந்த ரோசா மலர் ஒளிவீசியது.

"இது ஓர் அற்புதமான மாயா தோற்றம்" நண்பர்கள் ஒருமித்துக்கூறினார்கள். அவர்கள் தாங்கள் வித்தைகளை காட்டும் ஒரு யந்திரவாதி முன்னிருப்பதாக அப்பொழுது எண்ணினார்கள்.

"தயவுசெய்து உங்கள் ஜாலவித்தையை தெளிவுபடுத்துங்கள்" என்று மூவரும் ஒருமித்துக்கூறினார்கள்.

"இளமையின் ஊற்று என்பதுபற்றி நீங்கள் கேள்விப்படவில்லையா?" அவர்களைப் பார்த்து இப்படிக்கேட்டுவிட்டு டாக்டர் மேலும் தொடர்ந்தார்:

"பியோன் என்னும் ஸ்பானியன் அதைத்தேடி இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுக்கு முன் தேசாந்தரம் போனான். ஆனால் அவன் இதைக்கண்டுபிடிக்கவில்லை. இளமை ஊற்றின் இருப்பிடத்தைச் சமீபத்தில் கண்டுபிடித்த எனது நண்பனொருவன் மாதிரிக்கு அனுப்பிய அதன் நீரே இக்கிண்ணத்தில் இருக்கின்றது"

"உம்...." பட்டாளத்தான் உறுமிக் கொண்டான். "இந்த நீர் மனிதனுடலில் என்ன மாற்றத்தைச் செய்யப்போகிறது" என்று அவன் அலுத்துக்கொண்டான். 'நீங்களே வேண்டுமானால் அதைப் பரீட்சித்துப் பார்க்கலாம், எனது நண்பர்கள் இளமையைவிரும்பி அதை ஏற்பார்கள் என்றே நம்புகிறேன். என் மட்டில் நான் தொந்தரவுகள் நிறைந்த இளமையை மீண்டும் அடையவிரும்பவில்லை."

தமிழாக்கம்:
வ. குகசர்மா

இவ்வாறு கூறிக்கொண்டே டாக்டர் தன் முன்னுள்ள நாலு கிண்ணத்தில் தண்ணீரை இளமையின் ஊற்று நீரினால் நிரப்பினர்.

"எனது அரிய நண்பர்களே! இதைக் குடிக்கமுன்பு உங்களுக்கு ஒரு வேண்டுகோள். நீங்கள் வாழ்க்கை இரண்டாம் முறையாக இளமைப் பூஞ்சோலையை அடையும்போது சாதாரண இளவயதுள்ளவர்களின் எண்ணங்களுக்கு அடிமையாகிவிடாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்"

டாக்டரின் இந்தக் கூற்றுக்கு ஒரு புன்சிரிப்பே நாலுபேரிடமிருந்தும் கிடைத்தது.

நாலுபேரும் தங்களுக்காக வைக்கப்பட்டிருந்த யவனகல்பபானத்தை அருந்தினர்கள். ஒருவரையொருவர் அன்றுதான் பார்ப்பவர்கள் போலப் பார்த்துக்கொண்டார்கள். அவர்களது முகங்கள் பிரகாசமடைந்தன. கன்னங்களிலெல்லாம் இளமையின் சாயை படர்ந்தது. வயோதிப மாது தலையிலுள்ள தொப்பியைச்சரி செய்து கொண்டாள். அவள் தான் ஒரு மங்கை எனக் கருதினாள். ஒரு யந்திர சக்தி வேலை செய்ய ஆரம்பித்திருந்ததை அந்த நால்வரும் உணர்ந்தனர்.

"எங்களுக்கு இந்த நூதனபானத்தில் இன்னும் தருங்கள்; நாங்கள் இன்னும் வயோதிபராகவே யிருக்கிறோம்" நாலுபேரும் ஒருமித்துக்கத்தினர்கள்.

"பொறுமையாயிருங்கள்" டாக்டர் ஹெடீச்சர் கூறினர் "அரை மணித்தியாலத்திற்குள் நீங்கள் இளமையை அடைவீர்கள். இதோ யவன பானம் உங்கள் சேவைக்கு காத்திருக்கின்றது. இவ்வாறு கூறிக்கொண்டே மீண்டும் நாலு கிண்ணங்களிலும் அதை நிரப்பிக்கொடுத்தார். அவர்கள் ஆவலுடன் வாங்கிப் பருகினர்கள் சற்று நேரத்தின் பின் மூன்று வாலிபருடன் ஓர் அழகிய இளமங்கையும் அங்கே இருந்தார்கள்

"நீ மிகவும் அழகுள்ளவளாக இருக்கிறாய்" விதவையைப் பார்த்துப் பட்டாளக்காரன் கூறினன். அவன்பொய் சொல்வதாகக் கருதிய விதவை கண்ணாடியில் பார்த்து அது உண்மை என தெரிந்து கொண்டாள்.

அரசியல் வாதி, தேசாபிமானத்தைப் பற்றிச் சில நிமிஷம் பேசினன். அவன் குரல் ஆழமாகவும் உறுதியாகவும் இருந்தது. பட்டாளக்காரன் ஏதோ ஒரு சிருங்கார ரஸப் பாட்டைப் பாடினன். அவன் கண்கள் விதவையின்மீது பதிந்திருந்தன. பழைய கணக்கு வியாபாரியின் மனம் முணுமுணுத்தது. விதவையோ கண்ணாடியில் தன் உருவத்தை தானே பார்த்து வியந்தபடி இருந்தாள். நரைமயிர் எப்பகுதியிலாவது தெரிகிறதாவென ஆராய்ந்தாள். இறுதியில் நடனமிட்டுக் கொண்டே மேசைக்கு வந்தாள். "என் அன்பான வயோதிப டாக்டரே. எனக்கு இன்னும் ஒரு கிண்ணப் பானம் தாருங்கள்" எனக் கேட்டாள். டாக்டர் மேலும் நாலு கிண்ணங்களையும் நிரப்பி நால்வரிடமும் கொடுத்தார். இப்போது அந்த நால்வருக்கும் தம் சென்ற கால வாழ்க்கையின் துடிப்பு நிறைந்த இளமையும் ஒவ்வொருவரிடமும் சொந்த வாழ்க்கையில் அமைந்திருந்த குணமும் அவர்களை ஆட்டிவைத்தது.

"பெண்ணே என்னுடன் நடனமாடு" என்று பட்டாளக்காரன் கத்தினன்.

"முடியாது நானே அவளுடன் நடனமாடவேண்டும்" என்று அரசியல்வாதி பதிலுக்குக்கத்தினன். "ஐம்பது வருடங்களுக்கு முன்னமே அவள் என்னைத்தான் மணப்பதாக ஒப்புக்கொண்டிருந்தாள் என்று வியாபாரி கூறினன். இவ்வாறு சொல்லிக்கொண்டே மூவரும் அவளைச் சுற்றிவந்தார்கள். ஒருவன் அவள் இரு கைகளையும் பற்றினன். மற்றவன் அவளைத் தன்னுடன் அணைக்க முயன்றான். அடுத்தவன் அவள் தலையை அன்புடன் வருடினன். அவளோ அவர்கள் மத்தியில் தவித்தாள்.

அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரைத் தள்ளிவிட முயற்சித்தனர். அவர்கள் தள்ளிய வேகத்தில் மேசை கவிழ்ந்துவிட்டது. அதிலிருந்து எஞ்சிய யவனபானம் திசைமயங்கும் சிதறியது. 'நிறுத்துங்கள் நான் இதைசகிக்கமாட்டேன், என்று டாக்டர் உறுதியான குரலில் ஆணையிட்டார். யாவரும் அவரவர் ஆசனங்களில் போய் அமர்ந்தார்கள். அவர்களின் உடலெங்கும் ஒரு குளிர் பாய்வது போலிருந்தது.

"இப்போது இந்த மலரைப் பாருங்கள்" டாக்டர் ரோசா மலரைச் சுட்டிக் காட்டினர். ரோசா மலர் சோபை மங்க மெல்ல, மெல்ல அது முன்பிருந்த நிலைக்குப் போய்க்கொண்டிருந்தது. நால்வரும் தங்களையும் முதுமை அழைப்பதை உணர்ந்தனர்.

மிக விரைவில் மறுபடியும் மூன்று வயோதிபர்களும் ஒரு கிழவியும் அங்கே காணப்பட்டார்கள். யவன கல்பபானத்தின் சக்திசிறிது வேளை மட்டுமே பயனுடைத்தாகவிருந்தது.

'நாங்கள் திரும்பவும் வயோதிபர்களாகிவிட்டோமே'என்று நால்வரும் கத்தினர்கள்.

"ஆம் நீங்கள் இப்போ வயோதிபர்கள் தாம்; இனி என்றைக்கும் அப்படித்தான். எஞ்சிய யவன பானமும் சிந்திப்போய்விட்டது அதற்கு நான் கவலைப்படவில்லை இந்தச் சில நிமிடங்கள் பல வருடகாலத்தில் நான் அறியவேண்டியவற்றை கற்பித்துவிட்டது" என்று அவர்களிடம் டாக்டர் கூறினர்.

ஆனல் அந்த நால்வரும் இதை ஒரு பாடமாகக்கருதவில்லை. அவர்கள் இளமையின் ஊற்றுநீரான அந்த யவன கல்பபானம் உள்ள இடத்தை எப்படியாவது கண்டுபிடிப்பதென முடிவுசெய்தார்கள்.

## குலத்தின் மணி விளக்கே

— "மோசிகீரன்" —

பவளவாய்
இதழ் விரிந்து
படரும் புன்னகை
மடலவிழ்ந்து
குவளைக் கண்
சிறு மலரில்
குறும்பின் நெடிலைக்
கண்டுவிட்டால்
தவழும் உன்றன்
பொன்னுடலை
அணைத்து இன்பம்
பெருக்கிடுவேன்
கவலை என்னை
நாடவில்லை
குழந்தாய் நீயு
அருகிருக்கில்!

★

சங்கு வளையல்
கைகுலுங்க
சாந்தமுடனே
எனை அழைத்தால்
எங்கும் பிரிந்து
ஏகிடுவேன்
எழிலுருவம் தனை
அணைத்து
பொங்கும் என்றன்
உள்ளமது
புதுஉலகில்
உலவிவர
திங்கள் வதனம்
சிவப்பேற
தந்திடுவேன்
இன்பமுத்தம்.

★

நுங்குப் பற்கள் வெளித்
தெரிய
நீயும் சிரித்து
மகிழ்கையில்
[illegible]
வருவதில்லை
திகழும் பொருட்டு
ஒளியில்லை
எங்கள் குலத்தின் மணி
விளக்கே
எழில் மழலை
சிந்தகையில்
தங்கு புவியில் கலைச்
செல்வம்
தழுவிடுமே
இழக்குதடா!

நெஞ்சம் மறவா நினைவு

# காந்திஜியின் கடைசிக் கடிதமும் கையொப்பமும்

— எஸ். கே. ரி. —

இருபத்தி ஒன்பதாம் திகதி ஜனவரி மாதம். இறப்பதற்கு ஒரு நாள் முன்னதாக, காந்திஜி செய்யவேண்டிய கடமைகளை வழக்கம் போலவே செய்தார். அன்று இரவு ஒன்பது மணியளவில் படுக்கைக்கு செல்வதற்கு முன்னதாக தனது வேலையாட்களுடன் எல்லாம் தமாஷாக பேசிக்கொண்டார். மறு நாள் காலை முப்பதாம் திகதி ஜனவரி மாதம் 1948-ம் ஆண்டு வழக்கம் போல காலை 3-30 மணியளவில் படுக்கையை விட்டு எழுந்துவிட்டார். மறு நாட்கள் போல—தனது குழுவினர் ஒருவர் பிரார்த்தனைக்கு படுக்கையை விட்டு எழுந்திராதது அவருக்கு கவலையை உண்டு பண்ணியது. இருந்தும் இதனைத் தன்னிடமுள்ள ஒரு குறைபாடாகவே காந்திஜி கருதினர். பின்னர் 4-45 மணியளவில் வெந்நீரும் தேசிக்காய்ச்சாறு தண்ணீரும் அருந்திக் கொண்டார். அதன் பின்னர் கடிதத் தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட பைலைக் கொண்டுவரும் படி கட்டளையிட்டார் முதல் நாள் இரவு தனது குஜராத்தி நண்பருக்கு எழுதிய கடிதமொன்றைத் தேடினார். அந்தக்கடிதம் பின்வருமாறு—

எனது அருமையான கிஸ் கோருலால்,

எனது பிரார்த்தனை முடிந்தபின்னர் இந்த நேரத்தை உங்களுக்கு கடிதம் எழுதுவதற்காக ஒதுக்கியுள்ளேன். சங்கரராயருடைய மகள் இறந்தசெய்தியை அறிவித்திருந்தீர்கள். அதுபற்றி நான் அவருக்கு (சங்கரராயர்) கடிதம் எழுதியுள்ளேன். சேவாக்கிரம் போவது பற்றி நாளைதான் தீர்மானிக்கப்படும்.

உங்கள்,
பாபு.

ஆனல் சங்கரராயருக்கு அனுப்பியிருந்த கடிதம் மிகவும் மனதை உருக்கக் கூடியதாகவும்—இறப்பின் தத்துவத்தை தெளிவு படுத்துவதாகவும் இருக்கின்றது இது தான் அந்தக்கடிதம். "கிஸ் கோருலால், உங்களுடைய மகள் இறந்த செய்திபற்றி தெரிவித்திருந்தார். நான் எதை உங்களுக்கு எழுதலாம்? என்ன ஆறுதலை நான் உங்களுக்குக் கொடுக்க முடியும். இறப்பு ஓர் உண்மையான நண்பன் எங்களுடைய அறியாமையே எங்களை அதையிட்டு வருந்தச் செய்கிறது."

பிற்பகல் 1-30 மணியளவில் தனது நண்பர்களையும்—தன்னைக்காண வந்தவர்களுடைய விஷயங்களையும் முடித்துக் கொண்டார். காந்திஜியைக் காணவந்தவர்களில் இலங்கையிலிருந்து டாக்டர் சில்வாவும் அவருடைய மகளும் சென்றிருந்தார்கள். சில்வாவினுடைய மகள் காந்திஜியைக் கண்டு 'ஓட்டக்கிராவ்'வில் கையெழுத்து வாங்கிக் கொண்டார். இதுவே காந்திஜி கொடுத்த கடைசிக்கையெழுத்தாகும் எல்லாம் 4-30 மணியளவில் முடிந்துவிட்டன. பிரார்த்தனை நேரம் அணுகிக் கொண்டிருந்தது. எனவே உணவருந்திவிட்டு பிரார்த்தனைக் கூட்டத்திற்கு சென்றுகொண்டிருந்தார் அப்படி போய்க்கொண்டிருக்கும் பொழுது காந்திஜி பின்வருமாறு குறிப்பிட்டார் "பத்து நிமிடங்கள் போய் விட்டன குறிப்பிட்ட நேரத்திலிருந்து—நான் சரியான நேரத்திற்கு கூட்டங்களுக்குச் செல்லவேண்டும்." காந்திஜியின் வருகையைக்கண்டு ஜனங்கள் பாதையையொன்றினை விட்டுக்கொடுத்தனர். ஜனங்கள் காந்திஜியின் வருகையை வாழ்த்த ஜயகோஷம் செய்தனர். இதற்கு தனது ஆதரவைத் தெரிவிக்கும் நோக்

(9-ம் பக்கம் பார்க்க)

# இதயத்தில் நீ

இந்தத் தலைப்பைப்பார்த்ததும், ஏதோ காதற்கதையாகத்தானிருக்கவேண்டும் என்று பலரும் ஊகிக்கக்கூடும்.

ஆனால், நான் சொல்லப் போகும் கதை உன்னைப் பற்றியது என்பதை அவர்கள் அறிந்தால், தமது ஊகம் எவ்வளவு தப்பிதமானது என்பதை உணருவர்.

ஒருவகையில், உன்னையும் நான் காதலிக்கின்றேன் என்றும் சொல்லலாம். காதல் என்றால் அன்புக்கு இன்னொரு வார்த்தை தானே? ந்தை மகனையும், தாய் குழந்தையையும், நண்பன் நண்பனையும் காதலிப்பதில்லையா? அந்த வகையில் நானும் உன்னை உளமார, மனமார நேசிக்கிறேன்; காதலிக்கிறேன்.

உன்னை நான் நேசிக்காமல் எப்படி இருக்கமுடியும்! உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பு, நேற்று இன்று ஏற்பட்டதொன்ரு? முப்பதுவருடத் தொடர்பாயிற்றே! சாதாரணமானதா?

ஆனல், இந்த ஐந்து வருட காலமாக நான் உனது காதலை எழுத வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தவன். உள்ளத்தில் தோன்றிய அந்த ஆவலை, இத்தனை காலமாகப் பல்வேறு காரணங்களுக்காகத் தள்ளிப் போட்டுவந்துவிட்டேனே, அது அந்த நீடிய தொடர்புக்கு நான் இழைத்த சிறு அநீதி என்றே என் மனச்சாட்சி இன்றும் என்மீது குற்றம் சுமத்துகிறது.

எப்படியோ இன்று ஜனவரி முதலாம்திகதி — 1964-ம்ஆண்டின் முதல்நாள், உனது கதையை எழுதி முடிப்பதென்று தீர்மானித்து, எழுதவும் தொடங்கிவிட்டேன். இனி, உனது கதையை உலகுக்கு எடுத்துச் சொன்ன பிறகு தான், பேனவைக் கீழே வைப்பேன்.

இதுவரை காலம் நான் உன் கதையை எழுதாமல் தள்ளிப் போட்ட குற்றத்தை, உனது பரந்தமனம் மன்னித்துவிடும் என்பதும் எனக்கு நன்ருகத் தெரியும்.

அப்பொழுது எனக்குப் பத்து வயதுக்கும் ஒன்ரோ, இரண்டோ கூடுதலாக இருந்திருக்கும்.

பள்ளிக்கூட நாட்களானல், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், விடுமுறை நாட்களானல் ஒவ்வொருநாளுமே உனது வருகையை எதிர்பார்த்து வாசலில் நிற்பேன்.

நீ சந்தியில்வந்து உன் சைக்கிளை விட்டு இறங்குவதும், உடனே உன்னைச்சுற்றி ஒருசிறு கூட்டம் கூடுவம், நான் இங்கு நின்றபடியே, என் வீட்டு வாசலிலிருந்தே காணக்கூடிய அன்ருட நிகழ்ச்சிகள்.

சந்தியில் வைத்தே, நீ வீடு வந்து தரும் வரைககும் பொறுத்துக் கொள்ளமுடியாத நபர்கள், உனது வாடிக்கைக்காரர்கள் தமது ஆவலைக்கட்டுப் படுத்தமுடியாது. உன்னிடம் தத்தம் பத்திரிகைகளைப் பறித்துக் கொள்வதையும் என்னல் பார்கக முடிகின்றது.

இவர்களை ஒருவாறு திருப்திப்படுத்திவிட்டு சைக்கிளின் மீது ஏறிப் புறப்படும் தருணத்தில், இரண்டொரு 'ஓசி வாசகர்கள்' — இவர்கள் பெரும்பாலும் சந்திச் சண்டியராகவே இருப்பர், உனது சைக்கிளின் பின்னல் இருக்கும் பத்திரிகைக் கட்டிலிருந்து இரண்டொரு பத்திரிகையை இழுத்தெடுத்து விடுவதையும் நான் காண்கின்றேன்.

ஆனல், உனக்கு இவை பழகிப் போன சம்பவங்கள். நீ, இப்படி இரண்டொரு பேப்பர் சந்திக்குச்சந்தி, களவாடப்படுவதைப்பற்றிக் கவலைப்படமாட்டாய். கவலைப் படுவதில் பிரயோசனமில்லை என்பதை அறியாதவனு நீ?

மெதுவாகப் 'பெடலை'க் காலால் அழுத்திய வண்ணம், சில வீடுகளையும் தாண்டி, இதோ,என்னருகிலேயேவந்துவிட்டாய்.

பத்திரிகைக் கட்டிலிருந்து ஒரு தினசரியை எடுத்து 'இந்தா, தம்பி!' என்று நீ நீட்டும்போது, தாயிடம் பட்சணத்தை எவ்வளவு ஆவலுடன் குழந்தை வாங்குமோ அவ்வளவு ஆவலுடன் உன்னிடமிருந்து, நீட்டிய பத்திரிகையை வாங்குகிறேன்.

உனது முகத்திலும் ஒரு புன்சிரிப்பு. உள்ளத்தில் ஏதோவொரு திருப்தி ஏற்பட்டதன் பிரதிபலிப்பு. எனது முகத்தில் கொட்டிக்கிடந்த ஆவல்தான் உனக்கு உனது கடமையில் அவ்வளவு திருப்தியைத் தந்ததோ?

நீ போய் விடுகிருய். நான் பத்திரிகையில் 'சிறுவர் பகுதி'யைத் தேடிக்கண்டு பிடித்து, அதில் மூழ்கிவிடுகிறேன்.

இப்பொழுது நான் வாலிபன். பருவ உணர்ச்சிக்கொந்தளிப்பில் அகப்பட்டுத் தத்தளிக்கும் இளைஞன்.

ஆமாம். நீநினைப்பதும் எனக்குத் தெரியும். எனக்குப் பொருத்தமான ஒருபெண்ணைக் கட்டிக்கொண்டு, நான் மாப்பிள்ளையாகக் காட்சியளிக்க வேண்டுமென்ற விருப்பம் உனக்கு. அரும்புமீசையைக் கண்டதும், உனக்கு அந்த ஞானம் பிறந்துவிட்டதோ?

அன்று போல்தான் இன்றும் நான் உனது வரவை அதே ஆவலுடன் எதிர்பார்த்த, 'வழி மேல் விழி வைத்து' நிற்கிறேன்.

ஆனல், அன்று நீ என்னுடன் பேசாத விஷயங்களை எல்லாம், இன்று நீ மனம் விட்டுப் பேசுகிருய்.

உனக்குத் தெரிந்த வாழ்க்கைத் தத்துவங்களை அவிழ்த்து விடுகிருய்!

இளைஞனை எனக்கு, மணமாகிப பலவருட அனுபவம் பெற்ற நீ, இதமான யோசனைகளை எடுத்துரைக்கிருய்.

அரசியலில் உனக்கு விளங்காதபுதிகளை, என்னிடம் சமர்ப்பித்து, அவைக்கு நான் கூறும் விளக்கங்களை ஆவலுடன் கேட்டு, பரமதிருப்தியுடன் செல்கிருய்.

உன்னைப் பற்றியும் உனது மனைவி, மக்களைப் பற்றியும் நானும் விசாரிக்க ஆரம்பிக்கிறேன். இதுவும் எனது வளர்ச்சிக்கு அறிகுறி அப்பொழுதெல்லாம் நீயும் தயங்காமல் பதில் சொல்லுகின்ருய்.

ஆனல் ... நீ கூறிய ஒரு விஷயம் இன்றும் எனது உள்ளத்தை வாட்டத்தான செய்கிறது. அதை அன்று கேட்டதும் துணுக்குற்ற என் வாலிப இதயம், இன்றும் அந்த நினைக்கும் பொழுது துணுக்குறுகிறது.

'உனக்கு எத்தனை குழந்தைகள்?' என்று நான உன்னை வினவினேன்.

'ஒன்றுமில்லை, ஐயா. நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாக இருக்க வேண்டியவன் நான். ஆனல் ... எல்லாமே செத்துப் பிறந்தன ...' உன் கண்கள் கலங்கின. எனக்கு, ஏன் அந்தக் கேள்வியைக் கேட்டோமென்ருகிவிட்டது.

## நீ

எத்தனையோ வாசகர்களின் உள்ளங்களைத் திருப்திப்படுத்த தினமும் பல காதமைல் சைக்கிள் மிதித்து மிதித்து வில்லென வளைந்து வரும் உனது முதுகே சாட்சி கூறுமே, ஏன் உனக்கு புத்திர பாக்கியம் இல்லாமல் போய் விட்டது என்று.

என்னுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, சில சமயம் நீ இருமும் இருமலே உன்னுடைய இருதய பலவீனத்தை வெளிப்படுத்தி விடுமே.

இத்தனை தியாகத்தை உன்னிடம் கேட்கும் இந்த உத்தியோகம், உனக்குப் பெரும் பணத்தை அள்ளி இறைத்து உன்னைப் பெரிய செல்வந்தனுகவாவது ஆக்குகிறதா? அதுவும் இல்லை. ஏதோ வாழ்க்கையை ஓட்டுவதற்கு ஏற்ற சொற்ப ஊதியம். ஆனல் உனது சேவையால் பயன் பெறும் சிறுவர், வாலிபர், வயோதிபர் எத்தனை எத்தனை பேர்!

அது உனக்குத் தெரிவதால் தான் போலும், இவ்வளவு கஷ்டங்களுக்கிடையிலும், நீ உன் புன்சிரிப்பை அன்று போல் இன்றும் பாதுகாத்துக்கொள்ள முடிகிறது...

இன்று நான் மணமாகி, மூன்று குழந்தைகளுக்குத் தந்தையுமாகிவிட்டேன்.

### மனோகரன் மயில்வாகனம்

ஆனல், சொல்வதில் வெட்கமில்லை—அன்று, முப்பது வருடங்களுக்கு உன்னை நான் எதிர்பார்த்து நிற்பது போல் தானே, இன்றும் வாசலில் உனக்காகக் காத்து நிற்கிறேன்.

என்னிலே இத்தனை வருடங்களுக்கிடையே எத்தனையோ மாற்றம்! ஆனல் உன்னிடமோ, தலைமயிரில் அங்குமிங்குமாகச்சில நரைகள், கூனிய முதுகில் இன்னும் அதிக கூனல், உடலில் அதிக தளர்ச்சி, — இவை தவிர, வேறு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவுமில்லை.

எப்போதும்போலத்தான் நீ எனக்குக்காட்சி அளிக்கின்ருய். சின்னஞ் சிறு வயதில், 'சிறுவர் பகுதி' யைப் பிரித்துப் பார்க்கும் ஆவலைத் தவிர, பத்திரிகையிலோ அல்லது வாழ்க்கையிலோ சரி, வேறு 'வயது வந்த' ஆவல்களோ, தத்துவ விவகாரங்கள், அரசியல் பிரச்னைகள், இலக்கிய சர்ச்சைகள் இவற்றில் ஈடுபாடோ, அக்கறையோ இல்லாத அந்தச் சின்னஞ்சிறு வயதில் நான் கண்ட சிவசம்புவையே—இன்று, கல்யாணம் முடித்து, மூன்று குழந்தைகளுக்குத் தந்தையுமாகிவிட்ட பிறகும்—முப்பது நீண்ட வருடங்களுக்குப் பின்னும்—காண்கிறேன்.

இந்த முப்பது வருடங்களிலும், நான் பார்த்த மனிதர்களில் எத்தனை மாற்றங்கள். அறிந்த நாடுகளில் எத்தனை மாற்றங்கள். உலக அரங்கிலேயே எத்தனை மாற்றங்கள்.

ஆனல்......

நீயோ, அதோ, முப்பது வருடங்களுக்கு முன் போலவே இன்றுகூட மெதுவாக வந்து, சந்தியில் சைக்கிளை நிறுத்திவிட்டு, இறங்குகிருய்.

உன்னைச் சுற்றி சிறிய கூட்டம் கூடுவதை இன்றும் இங்கிருந்து நான் காண்கிறேன்.

நீ புறப்படும் சமயம் பார்த்து, உனது பத்திரிகைக் கட்டிலிருந்து, 'ஓசி வாசகர்' இரண்டொரு பேப்பரை இழுத்

(9ம் பக்கம் பார்க்க)

## நற்செய்கை தானே?

முற்றத்தில் படர்ந்
திருந்த
முல்லை மலர்ப்
பந்தரிலே
நற்றேன் உள
மலர்கள்
நவினமாய்
அங்கிருக்க
சுற்றிச் சுற்றி வந்த
அளி
சுவைத்த மலரை
விட்டு
மற்றும் பல நாடி
மகிழ்ச்சி பொங்கச்
சென்றதுவே!

பொற்றேரில் பரிதியுமே
பொங்கி வரும்
அழகினையே
உற்று ரசிக்கும்
முல்லையிடம்
உறவினன்போல்
அளி வந்து
[illegible] மலரிதழில்
தேனை(ப்)
பறித்து, பல
மலரைத் தீண்டும்
[illegible]
[illegible]வியே, இவை
நற் செய்கை
[illegible]ரே? சொல்.

மணிசேகரன்

# நவ இந்தியா: சமூகசேவைமுதல் சமுதாயப் பேராட்சிவரை

— என். ஆர். மல்கானி —

வெவ்வேறு அமைச்சகளில் சமூகசேவகளை ஒப்படைத்து அவற்றை செயற்படுத்த உத்தியோகத்தர்கள் குழு ஒன்றும் கிரமமாக நியமிக்கப்பட்டது. 3-வது ஐந்து வருஷத் திட்டத்தில் இப்படிப்பட்ட சமூக சேவைகளுக்கென 1300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஒரு சமுதாயநலவிருத்தி இராச்சிய சர்ககார், கீழ்ப்பட்ட நிலையில் உழலும் அதன் குடிமக்களின் துன்பங்களை அகற்றவும் கல்வியறியாமையைப் போக்கவும், நோய் பிணிகளைக் களையவும் முற்படின் பெரும் பகுதியும் இவ்வாறு நேர்வதுண்டு. இந்த நலவிருத்தி இராச்சிய சர்க்காரை நடத்திச் செல்கையில் அதன் முன்னேற்றப்பாதையில் பெரும் தடைகள் குறுக்கிடுகின்றன. சமூகநலவிருத்திச் சட்டம் கருத்தளவில் ஒப்புகொள்ளப்பட்டு கைக்கொள்ளப்பட்டது. ஆனல் 'சமூக பாதுகாப்பு' என்பது இன்னமும் புதிதான ஒன்ருகவும் எட்ட இருப்பதாகவுமே உளளது

தொழில்மயப்படுத்தும் அரசாங்கக் கொள்கையினல் அங்கங்கான சூழ்நிலை ஏற்படும் பிரச்னையில் சிறிது கவனமே செலுத்தப்பட்டிருக்கிறது. அத்துறையில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் தொழில்வட்டாரத்துடன் சங்கமித்து வாழ்வதை சீர்தூக்குவதாகவே உள்ளது. இப்போதைக்கு சமூகநலனுக்கும் மற்றும் மனிதநலனுக்கும் ஏற்படக்கூடிய பாதகமான அம்சங்களைப் பொருட்படுத்தாமல் தொழில் நிறுவனங்களை எங்கும் விரைவில் தொடங்க வேண்டுமென்ற எண்ணமே பெரும்பகுதியும் இருந்துவருகிறது. இதே சமயம் இராஜ்ய சர்க்காரானது அதன் எல்லை பிரமாணங்களுக்குள்ளமைய [illegible]பட்ட சமுதாயநல சேவைகளைப் பெருமளவில் தொ[illegible]கியுள்ளது. சுகாதார [illegible] முன்பிருந்ததைவிட எவ்வளவோ பரந்துபட்டதாக [illegible]பட்டுள்ளது.

★

சமூகசேவை பற்றி புதுமையான கருத்துகள் கொண்ட

## ◎ சென்ற வாரக் கட்டுரையின் தொடர்ச்சி ◎

இந்திய அரசியல் சட்டத்தின் 41-வது விதியில் இராஜ்ய சர்க்காரின் நிதிஇயல்புக்குட்பட்டதாக தொழில் உரிமை, கல்வி உரிமை, வேலையற்றோர்க்குப் பொதுநிவாரணம் வயோதிபர், நோயாளிகள், அசக்தர்கள் ஆகியோருக்கு உதவி என்பன பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு வரையறுக்கப்பட்டுள்ள எல்லை, பிரமாணங்களானது மிகவும் நெருங்கியதாகவும், பரந்துபட்டதாக இல்லாமல் மிகக் குறுகிய தானதாகவுமிருப்பதால் அரசியல் சட்டவிதி பிரஸ்தாபிப்பது போன்றதொரு சமுதாயநல இராஜ்ய சர்க்கார் சமீபத்தில் தோறறப்படுவதாயில்லை. அரசியல் சட்டத்தின் 46-வது விதியாம்சம் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் குறுநிலக் குடிமக்கள் போன்ற பின்நிலைப்பட்ட சமூகத்தினருக்கு கல்வி, மற்றும் பொருளாதார அபிவிருத்தி அளிப்பது பற்றிக் கூறுகிறது. இத்துறையில் ஓரளவு கைகூடியிருப்பது மெய். ஆனலும் அது இன்னும் கைகூடாமலிருக்கும் பெரும்பகுதியை எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது.

வர்களும் இருக்கிருர்கள். அவர்கள் புள்ளிவிபரக் கணக்குகள் எடுத்துக்காட்டி புதிய வழிமுறைகளும் சொல்லவேசொல்கிருர்கள். பெரும்பகுதியான சமூகத்தீமைகளுக்கு உடனடியான நிவர்த்திபரிகாரம் தெரிந்திருப்பவர்கள் போல இவர்கள் தோன்றினலும் இவர்களால் சமூகநிலைமைகளில் ஏதும் தணிந்துபோய்விடக் கூடுமென்பதற்கு அறிகுறிகள் தோன்றவில்லை. இவர்களுக்கிருப்பதெல்லாம் வெறும் ஏட்டுககல்வியே. கணிதமும் சாஸ்திரமும் கற்ற அறிவுதான் இவர்களிடமுள்ள சமூக இயல் ஞானம். இக்காலத்திலுள்ள மற்றும் எத்தனையோ வேலைகளைப் போல உண்மையான விருப்பு வெறுப்புகளின் சார்பற்ற ஒன்ருகவே இந்தப் புதிய சமூக வேலையும் இடம்பெறுகிறது. ஆராய்ச்சிகளைப பற்றி இவர்கள் வானளாவப்பேசுவார்கள். கேட்டால் மதிப்பெடுப்பு அறிக்கைகளையும் கணக்கெடுப்பு அறிக்கைகளையும் நேர்த்தியாகச் சமர்ப்பிப்பார்கள். சமூகசேவை சாஸதிரம் அறப் படித்த இன்சினீர்மார், சகல சமூககாரியங்களையும் அங்கங்கு நாடெங்கிலும் ஒன்றுக்கொன்று தொடர்பான சமூக சேவை தாபனங்களை அமைத்து கச்சிதமாக தீர்த்துக்கட்டிவிட தயாராக இருக்கிருர்கள்.

★

சமூக சேவைகளை நாடெங்கும் அமைப்பதில் இராஜ்ய சர்க்காருக்கு இவவிதம் பெரும் பொறுபபிருந்தும் கூட தேசமெங்கிலும் தனிப்பட்ட தொண்டர் இயக்கங்களும் சமூக ஊழியர் இயக்கங்களும் பல இருந்து வருகின்றன. இவறறில் பெரும் பகுதி நகர்ப்புறங்களிலும் ஒரு சிறு பகுதி கிராமப் புறங்களிலும் உள்ளன. இப்படி நாடெங்கிலுமே இவை உள்ளன. நகரப்புறங்களில் சர்க்கார் சேவைககு ஆதரவாக கல்வி வைத்திய துறைகளில் இவை பணிஆற்றுகின்றன மத்தியசமூகநலபோர்ட், இவற்றின திறமையான சேவைகளை மேலும் ஊக்கப்படுத்திவிட அருமபணி ஆற்றியிருக்கிறது. இவைகளை இன்னும் பெரிய தாகவிஸ்தரித்து அமைப்பதற்குஅந்தப் பகுதிகளுக்கென்றுள்ள சில குறிப்பிட்ட நிலைமைகள் சாதகமாயில்லாதிருந்தபோதிலும் இந்த அனைத்திந்திய சேவா இயக்கங்கள் பலவற்றின் அமைப்பையே முற்றிலும் மாற்றி சர்க்கார் அவறறின் சேவைகளை தனதாக்கிககொண்டிருக்கிறது. இதற்கு ஒரு உதாரணமாக, அகில இந்திய நெசவாளர் சங்கத்தைக் குறிப்பிடலாம். இது, வர்த்தக கைத்தொழில் அமைச்சின் கீழ் சட்டபூர்வமான தொரு அமைப்பாகக்கப்பட்டு 'அகில இந்திய காதி, கிராம கைத்தொழில் கமிஷன்' என்ற பெயருடன் இப்பொழுது இருந்து வருகிறது. இப்படி வேறும் பல, வெவ்வேறு அமைச்சுகளுக்காகியிருக்கின்றன. இவ்வியக்கங்கள் அவற்றின் தொடக்கத்தில் மேற்கொண்ட 'பொதுசன சேவை' யை இழந்து போய் சொந்தக் கொள்கைகளையும் நோக்கங்களையுமே மாற்றிக் கொண்டுள்ளன. ஹரிஜன சேவா சங்கம், பாரத சேவா சங்கம் என்பனவெல்லாம் இவ்வாறு சர்க்கார் நிதியுதவி பெறறே நடைபெறும் இயக்கங்களாகியிருக்கின்றன.

# கலை அரங்கம்

## "பாவை பெற்ற பரிசு"

(நடன நாடகம்)

சூடிக் கொடுத்த பாவையை நாம் கதைகளில் கேட்டுள்ளோம்; திருப்பாவையினால் அறிந்துள்ளோம்; ஆனால் "பாவை பெற்ற பரிசில்" கண்கூடாகக் கண்டோம்.

பக்தியில் பிறந்தது பரதக் கலை. அந்தத் தெய்வீக உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டெழுந்தது திருப்பாவை. அத்திருப்பாவைப் பாடல்களை மணி மணியாகப் பொறுக்கியெடுத்து, அதன் மூலமாகவே அப்பாடல்களைப் பாடிய பாவையையே நம் கண் முன் நிறுத்தினர்.

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் கோபியர் எழுந்து வீட்டைப் பெருக்கி, கோலமிட்டு, ஏனைய கோபியரையும் ஒவ்வொருவராகத் துயில் எழுப்புவதை தத்ரூபமாக எடுத்துக் காட்டினர். "எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ" எனக் கூவி அழைத்து "தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய" அபிநயித்து "ஊமையோ, அன்றிச் செவிடோ, அனந்தலோ!" என பாவத்துடன் விளக்கினர்.

"ஆழி மழைக் கண்ணா" என்று மழைக்குரிய தேவதையைக் குறித்துச் சிறுமியர் அபிநயத்தது அழகாக அமைந்தது.

கோபியர் ஒன்று சேர்ந்ததும் "ஓங்கி உலகளந்த உத்தமனை"ப் பாடிச் சென்று நீராடுகின்றனர். "கோவிந்தா! இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம்" எனக் கண்ணனை பக்தியுடன் தொழுதேத்தினர்.

கோபியருடையகரை கடந்த மகிழ்ச்சியை அவர்கள் ஆடிய துரிதகாலக் கும்மி எடுத்துக் காட்டியது. சூடிக் கொடுத்த சுடர்க் கொடி கண்ணனைப் பாடிப் பாடிக் கண்ணனையே அடைந்ததைக் கடைசியில் உன்னதமாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

கோபியராக வந்தவர்களில் செல்வி சாந்தா ரமணி, அனுஷா, ராஜேஸ்வரி என்பவர்கள் தாம் சிறப்பாக நடனமாடியது மட்டுமல்லாமல் கோபியர்களாகத் தம்மையாக்கி, அவர்களுடைய குணவியல்புகளை உணர்ச்சியுடன் எடுத்துககாட்டினர். கைமுத்திரைகள் கொண்டு கூற முடியாதனவற்றை அவர்களுடைய முக பாவம் சிறப்பாக எடுத்துக் காட்டியது.

இடையிடையே வந்த சங்கீத மெட்டுகள் ஏற்றதாக அமைந்திருந்தன. ஒலிபெருக்கி திறம்பட வேலை செய்திருந்தால் சிறப்பாக விருந்திருக்கும்.

மொத்தத்தில் "பாவை பெற்ற பரிசு" உயர்ந்த நோக்குடனும், ஆழ்ந்த பக்தியுடனும் படைக்கப்பட்ட ஒரு சிறந்த நிருத்திய நாடகம்.

இந்நாட்டிய நாடகத்திற்கு முன் நிகழ்ந்த பரத நாட்டியத்தில் "பரத கலைக்கு இணை ஏது?" என்ற நடனம் குறிப்பிடத்தக்கது. இப்பாட்டில் ஏழுவகைத் தாளங்களும் நுட்பமாக மாறி மாறி வந்து கொண்டிருந்தன.

சாந்தா ரமணி ஆடிய "எந்தரோ மஹானுபாவுலு" மெச்சத்தக்கது. சங்கீதமும் மூர்த்தியான தியாகராஜருடைய பஞ்சரத்ன கீர்த்தனங்கள் சங்கீதத்திற்கு அளிக்கும் பெருமையைச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அவை நாட்டியத்தில் இவ்வளவு சிறப்பாக அமையும் என்ற பெருமையை இங்கு கண்டோம்.

பழைய சம்பிரதாயத்தைத் தழுவியும் புதியனவற்றைப் புகுத்தியும் ஒரு சிறந்த கலை விருந்தை இரசிகர்களுக்கு அளித்தனர்.

— "கற்பகம்"

★

## "மேகலை"

(நாடகம்)

"அரங்கு" என்ற நாடக மன்றத்தார் இம்மாதம் 19-ம் திகதி தமது முதல் தயாரிப்பான மேகலை என்னும் நாடகத்தை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றினார்கள். கதை "ஒஸ்கார் வைல்ட்" எழுதிய "விந்தமியர்ச் சீமாட்டியின் விசிறி" என்னும் நாடகத்தின் தழுவலாகும். கற்றுணர்ந்தவர்களும் நாடகத்திலே ஈடுபாடு கொண்டு, நாடகத்துறையிலே நல்லதோர் மாற்றத்தை ஏற்படுத்த விரும்புவதைப் பாராட்ட வேண்டும். அதற்காகப் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைக் கண்மூடித்தனமாகத் தழுவுதல் பொருந்தாது. எமது கலாச்சாரத்தோடு இயையக் கூடிய பிறமொழியிலுள்ள நல்ல இலக்கியங்களையே தெரிந்தெடுக்க வேண்டும். இந்நாடகத்திலேயுள்ள புதுமை என்னவென்றால், நாடகம் முழுவதும் தூய தமிழிலேயே எழுதப்பட்டிருப்பதாகும். நாடகத் துறையிலே இது நல்லதோர் திருப்பம் என்றேசொல்லலாம்.

நாடகத்திலே ஒவ்வொரு பாத்திரமும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தபடியால், கதையினுடைய தொடர்பை அறியமுடியாமல் ரசிகர்கள் திண்டாட வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. ஏதோ ஒரு விசிறியை வைத்துக்கொண்டு கூட தேவையற்றபடி கதையை வளர்த்திருக்கிறார்கள். நாடகத்தினிடையே உயர்ந்த கருத்துக்கள் செறிந்திருந்தன. ஆனால் எமது ரசிகர்களிடையே எத்தனைபேர் அவற்றைச் சரியாகப் புரிந்து கொண்டார்கள் என்று எண்ணிப் பார்த்தால், நிச்சயமாக ஏமாற வேண்டியதுதான். நாடகத்திலே நகைச்சுவைக்கும்முக்கிய பாகம் அளிக்காதது ஒரு பெரிய குறையாக இருந்தது.

நடிப்பு பொதுவாகப் பரவாயில்லை. மேகலையாக நடித்த செல்வி இரா. இராஜமணி மட்டும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு முகபாவனை பிரதிபலிக்க நடித்தார். ஒளி அமைப்பு நன்றாக இருந்தது.

— எம். சிவலிங்கம்.

## படமாளிகையுடைய முதலாவது பல்கலைக்கழகம்

சதம்டன் பல்கலைக் கழகத்தில் புதிய படமாளிகை ஒன்று மார்ச் மாதம் 2-ம் திகதி திறந்து வைக்கப்படும். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பற்றிய கலைவிழவுடன் இது ஆரம்பித்து வைக்கப்படும். இப்படமாளிகை பல தரப்பட்ட கருமங்களுக்கும் உபயோகிக்கப்படும். விரிவுரைகள், இசைவிழாக்கள், படக்காட்சி ஆகியனவும் இங்கு நடைபெறும். இவ்விழாவில் ஷேக்ஸ்பியரின் "பன்னிரண்டாவது இரவு" என்னும் நாடகமே முதலாவத் நடிக்கப்படும்.

## காந்திஜியின்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்துடன் காந்திஜி தனது இரு கரங்களையும் ஒன்றாக எடுத்த பொழுது- அந்த ஜனக் கூட்டத்திற்குள் ஒருவர் இடித் கொண்டு முன் சென்றார். இதற்குள் காந்திஜி இரு கரங்களையும் ஒன்றாக்கி கை கூப்பிய பொழுது மூன்று குண்டுகள் ஒன்றின் பின் ஒன்றாகப்பாய்ந்தன. 'இராமா, இராமா' என்ற தனது கடைசி வார்த்தைகளுடன் காந்திஜி தரையில் சாய்ந்தார். இந்தியாவின் ஜோதி அணைந்தது.

## காட்டு ரோஜா



காட்டு ரோஜா (பத்மினி) கலங்கிநிற்பது கூட அவரது காதலர் பாஸ்கரனுக்கு (ராஜேந்திரன்) அழகாகத் தோன்றுகிறதா?

திருமணத்திற்குப் பின்னர் முதலாவதாக பத்மினி நடிக்கும் படம்தான் காட்டுரோஜா. காட்டு ரோஜாவில் சினிமாக் கலையும் குடும்பக்கலையும் ஒருங்கே பின்னி பிணைக்கபபட்டிருபபது அதனால் தானோ?

பெரிய குடும்பத்தில் செல்லமாக,உலகம் தெரிந்தால்பிள்ளை கெட்டு விடுவானென்று பெற்றோர்கள் அவனை வீட்டிலேயே வளர்க்கின்றார்கள். சாதாரணமாகப் பிள்ளைகள் படிப்பதற்கு பள்ளிக்கூடம் செல்வதுதானே முறை. ஆனால் இங்கே உபாத்தியாயர்கள் பிள்ளையின் வீட்டிற்கே வருகின்றார்கள். அப்படியிருந்தும் பிள்ளையின் நிலையில் மாற்றம் ஏதும் தெரியவில்லை

* * *

பெரிய வீட்டுப்பிள்ளையாகிய இராஜேந்தரனும் தங்கவேலுவும் காரில் போய்க்கொண்டிருக்கும் பொழுது, இராஜேந்திரன் தன காரை மரத்தில் மோதிக் கொள்ளுகின்றார், இங்கேதான் காட்டு ரோஜா பத்மினியைச் சந்திககின்றார்.

* * *

காட்டு ரோஜா, பாஸ்கரனுகத்தோன்றும் இராஜேந்தரனுக்கு தன் நிலையை எடுத்துக் கூறும் காட்சி மிகவும் ரசிக்கக் கூடிய கட்டமாக அமைந்திருக்கின்றது.

சொந்தப்பிள்ளையிலும் பார்க்க தங்கள் வேலைக்காரனை மேலாகக் கருதி அவனுக்கு தங்கள் வீட்டிலேயே திருமணம் நடக்க ஏற்பாடு செய்வதும், அந்தப் பந்தியிலே நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக ராஜேந்திரனுக்கும் பத்மினிக்கும் திருமணம் நடப்பதும் கதையில் ஒரு பெரும் திருப்பம். தங்கவேலுவின் நகைச் சுவையினால் நலல வயிறுகுலுங்கச் சிரிக்கலாம் எம். ஆர். ராதா தம் பாணியில் அட்டகாசம் போடுகின்றார்.

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த காட்டு ரோஜாவில் பல உண்மையையுணர்த்தும் கருத்துக்கள் நிரம்பியிருக்கின்றன. கே. வி. மஹாதேவன் இசையமைப்பு, கண்ணதாசன், பஞ்சு அருணாசலம் பாடல்களும் ரசிக்ககூடியதாக இருக்கின்றன. பத்மினியின் வதுவை விழாவில் பங்குபற்ற முடியாத ரசிகப் பெருமக்களெல்லாம் காட்டுரோஜா கட்டாயம் பார்க்க வேண்டும். அனாதைப் பிள்ளைகளைத் துன்புறுத்தும் தாய்மார்களும் சிறறன்னையரும் வேலைக்காரர்களைக் கொடுமைப் படுத்துபவர்களும் காட்டு ரோஜா பார்த்தால் மனம் திருந்துவர்.

—சி. க. தி

## இதயத்தில் நீ

(8-ம பக்கத் தொடர்ச்சி)

டுப்பதையும், நீ அதைக் கவனியாதது போலச் செல்வதையும் நான் பார்க்கிறேன்.

உனக்கு எப்படித்தான், இத்தனை வருடங்களாக இந்தக் கவர்ச்சியற்ற கடமையை, முகச்சுளிப்பும் முணு முணுப்புமில்லாமல், சிரித்த முகத்துடன் செய்ய முடிகிறதோ, அது உன்னைப் படைத்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

உனக்கும் தான் உன்னுடைய தொழிலில் எத்தனையோ தடவை சலிப்புத்தட்டியிருக்கலாம். 'இதென்ன வேலை இது' என்று நீ மனதுக்குள் அலுத்துமிருக்கலாம். ஆனால், என்னைப்போன்ற ஒரு சிலரின் மூலம் உனக்குக் கிடைக்கும் உற்சாகத்தை நீ நினைவு கூரும் பொழுதெல்லாம், அந்தச் சலிப்பும் அலுப்பும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிருக்கும் என்பதை நீயும் ஒப்புக் கொள்வாயல்லவா?

(10-ம் பக்கம் பார்க்க)


## வரி விளம்பரம்

### கடைகள் வாடகைக்கு

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் இடவசதியுள்ள புதிய கடைகள் மூன்று வாடகைக்குக்கொடுக்கப்படும். விரும்புவோர் விபரங்களை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் திரு. மு. கார்த்திகேச B. A. அவர்களிடம் அறிந்துகொள்ளலாம். 1910

### கார் விற்பனை

EL போட் சபயர் விற்பனைக்கு உண்டு. விபரம்: கந்தசாமி, 33, கொழும்புத் துறை றோட், சுண்டுக்குளி. 1923

### தொய்வு, நீரிழிவு

அனுபவ உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எமமிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள மருந்து 1 /50.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

### உபநயன அழைப்பு

நிகழும் சோபகிருது வருஷம் தைமாதம் 21-ந் திகதி (3 2 64) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி 39 நிமிஷம் தொடக்கம் 10 மணி 35 நிமிஷம் வரையும் உள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் எமது ஜேஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா அவர்கட்கும் பிரம்மஸ்ரீ கணேசரத்தின சர்மா அவர்கட்கும் உபநயனஞ் செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் சமுகம் தந்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் கேட்கின்றேன். தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

இங்ஙனம், தங்கள் அன்புள்ள ச. நாகேஸ்வர ஐயர் மணற்காடு, காரைநகர். 1916


## பண்பு எழுத்தாளர்

— தனிவழிக்கவிராயர் —

பண்பு இலக்கியங்கள் படைக்கும் எழுத்தாளர்
பண்பும் புரண்ட கதை பத்திரிகைப் பகுதிகளில்
பார்த்திருப்பீர் ஊரவரே! பண்பைப் படைப்பவர்கள்
பாருக்குத் தாம் படைத்த படைப்பல்லால் தம்மவர்கள்
நேர்மைத்திறன் வளர்க்க நினைக்கவில்லை; இவர் எழுத்தும்
ஊருக்கு உபதேசம் உள்வீட்டு வெறும் பூசல்;
யாருக்கோ தமிழ் எழுதும் மனப்பாங்கு; மமதையினால்
சீருடமை கெட்டார், செயல் கெட்டார், திறன் மறந்து
செல்வழியோ முன் என்றோ சென்றொழிந்த பாழ்வழியாம்
நல்வழியில் நடைபோடும் நல்லெண்ணம் இல்லாதவர்
போர் பகைமை மூட்டிப் புழுநிச்சூழ் புரளுகிறார்
பார் தம்பீ! இவர்தாம் எம் பண்பு எழுத்தாளர்.


அழகிய பெனியன் காலமேஸ் !!
"லேடன்" தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன

LEYDEN

பல நிறுககள்! பல அளவுகள்!! எங்கும்கிடைக்கும்

இன்றைய தேவை: சுதேசிப்பொருள் ஆதரவு
அதற்கு வழி 'லேடன்' பெனியன்கள் காலமேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், காலமேஸ்களையும் மிஞ்சியது 'லேடன்' பெனியன்களும், காலமேஸ்களும்

தொழிற்சாலை 7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## இதயத்தில் நீ...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இதோ, ஒப்புக்கொள்ளும் வகையில், எனக்கருகில் உனக்கே உரித்தான புன்சிரிப்புடன் வந்து விட்டாயே!

"ஐயா, இக்ராங்க பேப்பர்!" என்று பத்திரிகையை நீட்டுகிருய்.

'தம்பீ! இந்தா பேப்பர்!' என்றவனே, இன்று 'ஐயா' என்று என்னை அழைக்கிருய்.

இதற்குக் காரணம் எனது வயது முதிர்ச்சியா அல்லது உனது அந்தஸ்தா? இரண்டுமாகத் தானிருக்க வேண்டும், இல்லையா?

'ஐயா நாளைக்கு 'ஸ்டிரைக்' காமே! பேப்பரிலே போட்டிருக்கு... அதைப்பற்றி என்ன நினைக்கிறீங்க?"

உன்னுடைய விசாரணை தொடர்கிறது. என்னுடன் சிறிது நேரம் பேசிவிட்டுப்போக வேண்டுமென்ற ஆவலிலும், உண்மையாகவே 'ஸ்டிரைக்' பற்றி அறிய இருந்த உனது அக்கறையிலிருந்துமே உனது கேள்வி பிறக்கின்றது.

உனக்கு ஏதாவது என்னுடன் பேசாவிட்டால், பொச்சம் தீராது.

ஆகவே, நான் உனக்கு ஆறுதலாகப் பதிலிறுக்க ஆரம்பிக்கிறேன்.

உனது ஆசையைத் தீர்க்க மட்டுமல்ல, என் இதயத்தில் இடம் பிடித்துவிட்டவனல்லவா நீ?

அதற்காகவும் தான் அண்ணே, 'பேப்பர் சிவசம்பு அதிசயமானவன் நீ.

(யாவும் கற்பனை)


### தேவை

சீயாக்காய்பவுடர், ஊது பத்தி தயாரிப்பதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தேவன்ஸ் (ராஜா ஸ்டோர் அருகில்) 3|4 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 1913


## நோபல் பரிசு...

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடித்ததற்காக கார்ல் ஸீக்லருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இந்த முறையைக்கொண்டு வீட்டுக்கு வேண்டிய பிளாஸ்டிக் பொருள்களையும், பல மைல்கள் நீளமுள்ள நீண்ட குழாய்களையும், மோட்டார் வண்டிகளின் மேல் பாகங்களையும் செய்யமுடியும்.

பேராசிரியர் சார்ல் ஸீக்லர் கேஸ்ஸல் அருகில் பிறந்தவர். அவருக்கு வயது 65. இவர் சென்ற 20 வருடங்களாக மாக்ஸ் பிளாங்க் என்ற விஞ்ஞானக் கழகத்தின் இயக்குனராக இருந்துவருகிருர் இவர் ரூர் நகரமான மூல்ஹிமில் நடத்திய 'கார்பன்' ஆராய்ச்சி மிகவும் பிரசித்தமானது. ஹாம்பர்க் பல்கலைக்கழகத்திலும் ஹிடல்பர்க் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகச் சேவைசெய்தவர். 1946 முதல் 1952 வரை ஜெர்மன் ரசாயன நிபுணர்கள் சங்கத்தின் தலைவராக இவர் இருந்தவர். அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் அழைப்பை ஏற்றுச் சென்று வந்தவர். அவருடைய புகழ் இப்போது நோபல் பரிசு அளிக்கப்பட்டதன் காரணமாக இன்னும் அதிகரித்துள்ளது.


### விற்பனைக்கு

விதானை வீதி கண்டிக்குளியில் ஐந்து பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. வசிப்பதற்குச் சிறந்த இடம். பாடசாலைக்கு அருகில் உள்ளது. சகல விபரங்களுக்கும் 8 விதானை வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும். 1926.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## மரணவிசாரணை அதிகாரி இல்லை

ஊர்காவற்றுறை, சனி

வேலணைப் பகுதியில் தற்போது மரணவிசாரணை அதிகாரியாக ஒருவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் இங்கு நடைபெறும் மரணவிசாரணைகளைப் புங்குடுதீவு மரணவிசாரணை அதிகாரி நடத்திவரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல மாதங்களுக்கு முன் இப்பகுதியில் மரணவிசாரணை அதிகாரியாகக் கடமையாற்றி வந்த திரு. வி. கந்தையா காலமாகியபின் யாரும் இப்பகுதிக்கென நியமிக்கப்படவில்லை.

## பட்டினசபை தலைவர் தேரிவு ஒத்திவைப்பு

உடுப்பிட்டி, சனி

நேற்று நடைபெறவிருந்த நெல்லியடி பட்டினசபைத் தலைவர் தெரிவு இம்மாசம் நடுப்பகுதியில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பழைய கட்டைவேலி கிராமச் சபைத்தலைவர் திரு இ சச்சிதானந்தத்தின் சுயீனம் காரணமாக அவர் இதுவரை பட்டின சபையிடம் கணக்குகளை ஒப்பிக்கவில்லையென்றும், பட்டினசபை தலைவர் தெரிவுக்கு அதுவே முக்கிய காரணம் என்றும் அறியப்படுகிறது.

கிரிக்கெட்

## மழையால் தடைப்பட்டது

கல்கத்தா, பெப். 1

இந்தியக் கோஷ்டிக்கும் இங்கிலாந்து கோஷ்டிக்குமிடையே நடைபெற்றுக் கொண்டிருந்த 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று மழை காரணமாக நிறுத்தப்பட்டது.

இதுவரை இங்கிலாந்து தனது முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட் நஷ்டத்துக்கு 175 ரன்கள் எடுத்துள்ளது. இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸில் 241 எடுத்தது.

## மோட்டார் போக்குவரத்து சட்டம் திருத்தப்படும்

கொழும்பு, சனி

மோட்டார் போக்குவரத்தில் குற்றப்படுவர்களுக்கு அந்த இடத்திலேயே அபராதம் விதிக்கக் கூடியவகையில் மோட்டார் போக்குவரத்துச் சட்டம் திருத்தப்படவிருக்கிறது.

இவ்விதம் சட்டம் திருத்தப்படுவதால் குற்றப்படும் ஒருவர் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய சிரமமிருக்காது என்றும் வழக்கறிஞருக்கென செலவு செய்ய வேண்டியிராது என்றும் இதனால் நேரமும் பணமும் அவருக்கு மிச்சமாகுமென்றும் நீதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. டி. ஜே. ஆர். குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து பின் கோர்ட் விதிக்கும் அபராதங்களை தபாற்கந்தோர் மூலமாக இக்குற்றவாளிகள் செலுத்தக் கூடிய ஒழுங்குகளும் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.


எதிர்பாருங்கள்!

"பேபி பிருண்ட் மணிராஜா ஸ்தாபனத்தயாரிப்புகள்"

தரத்திலும், மணத்திலும், சுவையிலும் சிறந்தவை; உத்தரவாதமுள்ளவை. ஒருமுறை பாவியுங்கள் உண்மை விளங்கும்.

விபரங்களுக்கு:- T. V. சுப்பிரமணியம், (நிர்வாக அதிபர், உரிமையாளர்) 115, அம்பாள் கோவிலடி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். 1928


## விஷமிகளின் வேலையால் மக்கள் கவலை

நல்லூர், சனி

காங்கேசன் துறைப் பகுதியில் சில விஷமிகளின் செயல் காரணமாக இங்குள்ள மக்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளார்கள்.

இப்பகுதியிலுள்ள அரசடி வைரவர் கோவிலில் பூசிக்கப்பட்டுவந்த சூலம் கோவிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வெளிச்சவீட்டுச் சந்தியில் நாட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காங்கேசன் துறைப் பட்டினத்தில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதானது, பொதுமக்களுக்கு மிகவும் வேதனையை அளித்துள்ளது.

இப்பகுதியிலுள்ள ஒழுங்கைகளின் தமிழ்ப் பெயர்ப் பலகைகள் சிலவும் உடைக்கப்பட்டுள்ளன.

## லைசன்ஸ் இல்லாத படகோட்டிக்கு ரூ. 80 அபராதம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவைச் சேர்ந்த தம்பியையா என்பவர் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்தின் போது தண்டயல், சாரதிலைசன்ஸ் பத்திரங்கள் இன்றி தனது மோட்டார் படகை பிரயாணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தினார் எனச் குற்றம்சாட்டி தீவுப்பகுதி காரியாதிகாரியால் தொடரப்பட்ட வழக்கு நேற்று ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணையின்பின் நீதிபதி எதிர்யைக் குற்றவாளியாகக் கண்டு தண்டயல், சாரதி லைசன்ஸ்கள் இல்லாத குற்றத்திற்கு 40 ரூபா அபராதம் விதித்தார். லைசன்ஸ்பத்திரங்களை விரைவில் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் எச்சரித்தார்.

## கருணாநிதி மீதான வழக்கு 6-ம் திகதிவரை ஒத்திவைப்பு

மதுரை, பெப். 1

திராவிட முன்னேற்றக் கழக சத்தலைவர் திரு மு. கருணாநிதி உட்பட 14 பேர் மீது தொடரப்பட்டுள்ள வழக்குவிசாரணை இம்மாதம் 6-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

அரசியல் சட்டப்பிரதியை எரிக்கச்சதி செய்ததாக திரு. மு கருணாநிதி, என். வி. நடராசன் உட்பட 9 பேர் மீதும், அரசியல் சட்டத்தை எரித்ததாக திரு. முத்து உட்பட 5 பேர் மீதும் பொலிஸார் வழக்குத் தொடர்ந்திருந்தார்கள்.

இவ்வழக்கில் எதிரிகளுக்கு அளிக்கப்படவேண்டிய குற்றப்பத்திரிகை நகல்கள் இன்னும் தயாராகாததால் வழக்குவிசாரணையை மாஜிஸ்திரேட் திரு. எஸ். கோதண்டராமன் ஒத்திவைத்தார்.

கொழும்பு

## விவேகானந்தசபைக்கு புதிய கட்டடம்

கொழும்பு, சனி

கொழும்பு விவேகானந்த சபையினர் தமக்கென இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றைக் கட்டத் தீர்மானித்துள்ளார்கள்.

இக்கட்டடம் ஒரு லட்சம் ரூபா செலவில் கட்டப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

இப்போதுள்ள கட்டடம் அமைந்திருக்கும் இடத்திலேயே புதிய கட்டடம் நிறுவப்படவிருக்கிறது. நவீன வசதிகளைக் கூடியதாகக் கட்டப்படவிருக்கும் புதிய கட்டடத்தில் நூல்நிலையமொன்றும் விருந்தினர்கள் தங்கக் கூடிய அறைகளும் ஒய்வுமண்டபமும் இருக்கும்.

இக்கட்டடம் கட்டுவதற்கான முயற்சியில் சபையினர் தீவிரமாக ஈடுபட்டுவருதாகத் தெரிகிறது.

## விஞ்ஞானி கந்தையா பருத்தித்துறை வருவார்

பருத்தித்துறை, சனி

பிரிட்டனில் தற்போது வசித்து வருபவரும் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த உடுப்பிட்டியைத் தாயகமாகக்கொண்ட வருமான பிரபல விஞ்ஞானி டாக்டர் கே. கந்தையா திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வரவிருக்கிருர்.

ரோட்டறிக்கிளப்பின் அழைப்பின் பேரில் வரும் இவர் அன்றுமாலை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அணு ஆராய்ச்சி பற்றியசொற்பொழிவொன்றைநிகழ்த்தவிருக்கிருர்.

## ஜனவரி தொடக்கம் தமிழ வகுப்புகளில்லை

கொழும்பு, சனி

தெகிவளையில் உள்ள பரிசுத்த குடும்பக் கல்லூரியில் ஜனவரியிலிருந்து தமிழ் வகுப்புகள் நடத்தப்படவில்லை. இதன் காரணமாக தமிழில் கல்வி பயின்று வந்த மாணவிகள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கின்றனர் என அறியப்படுகிறது. கல்கிசைக்கும்-கொளும்பிட்டிக்கும் இடையில் உள்ள அரசாங்க பெண் பாடசாலைகளில் இங்கேதான் அறிவியல் ஆய்வுகூடம் இருக்கின்றது.

இந்த நடவடிக்கையினல் இங்குள்ள தமிழ் ஆசிரியை விரைவில் வேறு இடத்திற்கு மாற்றப்படுவார் எனத் தெரிய வருகின்றது. அண்மையில் இந்தப் பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்த பாடசாலைப் பரிசோதகர் இந்த ஆசிரியையிடமிருந்துதான் அப்பள்ளிக்கூடத்தைவிட்டு வேறு மாற்றத்திற்கு எதிர்ப்பில்லையென்று ஒரு கடிதத்தைக் கேட்டதாகவும் அதற்கு ஆசிரியை மறுத்துவிட்டதாகவும் தெரியவருகிறது. எனினும் இப்பள்ளிக்கூடத்தில் 19 வருடங்கள் கடமையாற்றிய இந்த ஆசிரியை அடுத்தமாதத்திலிருந்து மாற்றப்படலாமென நம்பப்படுகிறது.

## "முன்னேற்றத்திற்கு முயற்சி செய்யவேண்டும்"

நெல்லியடி, சனி

"எதிர்காலத்தில் முன்னேற்றம் காணவேண்டுமானல் நெசவுக் கைத்தொழில் நிலையங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற முற்போக்கான ஸ்தாபனங்களை அமைத்து அதன்மூலம்வரும் வருவாயைக் கொண்டுதான் எமது வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும். இதற்கு அரசாங்கத்தின் பண உதவியை எதிர்பார்ப்பதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. கிராமத்திலே உள்ள சகலரும் ஐக்கியமாக ஒற்றுமையுடன் ஒத்துழைத்து பணம் திரட்டி கிராம முன்னேற்றச் சங்கங்களை அமைக்கப்பாடுபடவேண்டும்" கரவெட்டி சனுவில் சனசமூக நிலையத்தின 10-வது மகாநாடு நிலைய முன்றலில் நடைபெற்றபோது மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் திரு. க ஆராசாத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. செ. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. வி. தங்கமணி; உபதலைவர்: திரு. என். செல்வராசா; காரியதரிசி: திரு. க இராசரத்தினம்; உபகாரியதரிசி: திரு. செ. சிவபாதம்; தனதிகாரி: திரு ஆ தங்கராசா; உபதனதிகாரி: திரு த. பரஞ்சோதி; கணக்குப்பரிசோதகர்: திரு. ஆ. சிவகுரு. நிர்வாகசபைக் குழுவொன்றும், சமாதானசபைக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

கொழும்பு, சனி

சட்டவிரோதக் குடியேறகாரர் ஒருவரிடமிருந்து ரு 1500 எடுத்துக்கொண்டதாக சந்தேகத்தின்பேரில் முன்னைநாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிள்ளா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

நவா (கொம்பனித்தெரு) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனேகர், கே. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, பி. எஸ். சரோஜா, சம்பந்தம்

மற்றும் பலர் நடிக்கும்



மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

மதுரமான இசை, அருமையான படப்பிடிப்பு, சிறந்த டைரக்ஷன், குலுங்கக்குலுங்க சிரிக்க வைக்கும் ஹாஸ்யங்கள் அனைத்தும் நிறைந்த உன்னத மலர்ச் செண்டு.

கண்டுகளிக்கத் தவருதீர்கள்.



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்வரி மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது